# திராவிடநாடு



# கேட்டீரா! சேதி

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, **அட்லி**, சைமன் கமிஷன் உறுப்பினராக வந்திருக்கிறார். அப்போது, காங்கிரஸ் கட்சி, சைமன்கமிஷனை பகிஷ்கரித்தது. பல ஊர்களில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களும், அதை ஒட்டிக்கலவரங்களும்நடைபெற்றன. இப்போது சென்னை கவர்னராக உள்ள பிரகாசா அவர்கள், அப்போதுஅட்லிக்குக்கருப்புக்கொடி காட்டினார்! காசிக்கு, சைமன் கமிஷன் வந்தபோது, பிரகாசா கருப்புக்கொடி காட்டிய சம்பவத்தை, சென்ற கிழமை, சென்னை ராஜபவனத்தில் ஒரு வரவேற்பு உபசாரத்தின்போது, கவர்னர், கூறிடக் கேட்கும் வாய்ப்பு, அட்லிக்குக் கிடைத்தது. இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கிய பெருமான் என்றும், ஜனநாயகக் கோட்பாட்டின் காவலன் என்றும் இன்று பாராட்டப்படும் அட்லிக்கு, அந்த நாட்களில் கருப்புக்கொடி காட்டிய சம்பவத்தை கவர்னர் எடுத்துக் கூறியபோது, அட்லியின் உள்ளத்தில் நெகிழ்ச்சி ஏற்பட்டுத் தான் இருக்கும்.

எங்களுக்கும் இப்போது சில இடங்களில், கருப்புக்கொடி காட்டுகிறார்கள்! என்று கவர்னர் பிரகாசா அதே கூட்டத்தில் கூறியது கேட்டு அட்லி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று எண்ணிக் கொண்டாரோ, அல்லது, கண்டனம், வெறுப்பு, எதிர்ப்பு ஆகியவற்றை தெரிவிக்க கருப்புக் கொடி காட்டுவதை முறையாக்கியவர்கள் நீங்கள் தானே— அதே முறையை இப்போது உங்கள் மக்களே கையாளுகிறார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டாரோ; தெரியவில்லை.

*

காஷ்மீர், புதிய அரசியல் திட்டம் தீட்டிக்கொண்டுவிட்டது, என்றாலும் அங்கு உள்ள ஷெடியூல் வகுப்பினரின் குறைகள் நீக்கப்படுவதற்கான வழி ஏதும் செய்யப்படவில்லை. நீண்டகாலக் கிளர்ச்சிக்குப் பிறகு, டாக்டர் அம்பேத்காரின் பெருமுயற்சியால், இங்கு ஷெடியூல் வகுப்பினருக்கு ஆட்சிமன்றங்களில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, உத்யோகத்திலும், கல்வித் துறையிலும், சலுகைகள் தரப்பட்டுள்ளன. நீண்ட காலமாகத் தாழ்த்தப்பட்டும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டும் வருகிற அந்த வகுப்பாருக்கு சில தனிச் சலுகைகள் தந்தாலொழிய, அவர்கள் உயர்ஜாதி இந்துக்களுடன் சமத்துவம்பெற முடியாது என்பதால், இந்தச்சலுகை உரிமை தரப்பட்டது. இதை அந்த வகுப்பார் பெறுவதற்காக, டாக்டர் அம்பேத்கார், காங்கிரஸ் கட்சியிடமிருந்தும், காங்கிரஸ் ஆட்சியாளரிடமிருந்தும் கடும் எதிர்ப்புப் பெற்றார். என்றாலும் அஞ்சா நெஞ்சுடன் கிளர்ச்சி நடத்தி வெற்றிபெற்றார்-ஷெட்டியூல் வகுப்பினருக்கு ஓரளவு சலுகை உரிமை கிடைத்தது. காஷமீர் அரசியல் சட்டத்தில், இந்த சலுகை ஏதும், ஷெடியூல் வகுப்பினருக்கு வழங்கப்படவில்லை. இதனைச் சுட்டிக்காட்டி, நியாயம் வழங்கும்படி வலியுறுத்தி ஒரு வேண்டுகோள் தீர்மானத்தை, ஜம்முவில் சென்றகிழமை நடைபெற்ற காஷ்மீர் இராஜ்ய அரிஜன மண்டல் மாநாடு நிறைவேற்றி, காஷ்மீர் முதலமைச்சர் பக்ஷிகுலாம் மகமதுவுக்கு அனுப்பிவைத்திருக்கிறது. மண்டல் மாநாடு இரு நாட்கள் நடைபெற்றன. ஷெடியூல் வகுப்புப் பிரதிநிதிகள் கலந்தாலோசித்து, இந்த ஏற்பாடு செய்துள்ளனர்.

*

எதியோபியா (அபிசீனியா) விவசாய நாடுதான் — என்றாலும் அங்கு ஏழ்மை இல்லை—என்று அபிசீனியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் உள்ள கல்லூரியில் தலைவராக உள்ள சைமன் என்பவர், கோட்டயத்தில் பேசியிருக்கிறார். அபிசீனியாவில், மேனாடுகளில் காணப்படுவது போன்ற ஆடம்பர வாழ்க்கை கிடையாது —என்றபோதிலும் மக்களிடையே, வறுமையும தாண்டவமாடுவதில்லை என்பதைக் கூறுகிறார். இத்தனைக்கும் அபிசீனியாவின் ஆட்சியில், மிக முற்போக்கான ஜனநாயக முறைகள் இல்லை. மன்னரின் வாக்குக்குத்தான் அதிகமான செல்வாக்கு இருக்கிறது. என்றபோதிலும், அபிசீனிய மக்களின் நல்வாழ்வுக்கான ஏற்பாடுகளைக் கண்ணும் கருத்துமாக ஆட்சி கவனித்துக் கொள்வதால், அங்கு ஏழ்மை தலைவிரித்தாடாமலிருக்கிறது. எதியோபிய மன்னர், கேரள அரசு துவக்க விழாவைக் காண வருகிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கோலாகலமான திருவிழாவைக் காண்பார். மெருகு கலையாத மோட்டார்கள் 'சாரை சாரை' யாக வருவதைக் காணப்போகிறார். சீமான்களும் சீமாட்டிகளும் கொலுவிருக்கக் காண்பார். அவருடைய கண்களுக்கு, ஏழ்மையும் துயரமும் கப்பிக்கொண்டிருக்கும் சேரியா காட்டப்படும்! நடைபாதைகளிலே உழன்று கிடக்கும் ஏழை மக்களை அவர் எங்கே காணப்போகிறார். எந்த வெளிநாட்டுத் தலைவர்தான் காண்கிறார்! அவர்கள் காண்பது, காந்தியாரின் சமாதி, தாஜ் மஹால், மகாபலிபுரம், அந்தந்த ராஜ்யங்களில் உள்ள 'பவனங்கள்!' அபிசீனியாவில் ஏழ்மை இல்லையாம்! கேட்கும்போதே ஆனந்தமாக இருக்கிறது! இங்கு, ஏழ்மை நெளிகிறது, கோடீஸ்வரர்கள் கொலுவிருக்கிறார்கள், கோலோச்சும் கட்சியோ, சமதர்மம் பேசுகிறது! 'இந்தியா' முன்னேறிவிட்டது, சகல துறைகளிலும், செல்வம் கொழிக்கிறது, தொழில் பெருகிவிட்டது, சுபீட்சம் காணப்படுகிறது என்று வெளிநாடுகளுக்குக் காட்டுவதற்கென்றே, சில பிரத்யேகமான சாதனங்களை, இங்கு உள்ள ஆட்சியாளர்கள் தயாரித்துவைத்திருக்கிறார்கள். நேருபண்டிதரின் திருக்குமாரி இந்திராகாந்தி, சென்ற கிழமை, மத்ய பாரதத்தில் துவக்கி வைத்த சங்கீத சர்வகலாசாலை இதுபோன்றதோர் சாதனமாக அமையும். இதற்காக 20-இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது!! இங்கு பிரபல 'பாடகிகளும்' 'வித்வான்களும், அமர்ந்து கெம்பீரமாக இசைவிருந்து அளிப்பதைக் காணும், எந்த வெளிநாட்டுத் தலைவருக்குத்தான், இந்தியாவில் ஏழ்மை தாண்டவமாடுவது தெரியப்போகிறது!!

# வெற்றி நமதே!

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [28-10-56] தனிப் பிரதி ௨ அணா [ இதழ் 17

இன்று, உலகின் எந்தப் பகுதியை நோக்கினாலும், அங்கெல்லாம் 'தனி அரசு' காண வேண்டுமென்ற ஆர்வம் கொழுந்துவிட்டெரிவதையே காண்கிறோம். எந்த நாடும்—அது எவ்வளவு சிறியதானாலும் இன்னொருவரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்க ஒருப்படாத உள்ள உரம்பெற்ற நிலையைக் காண்கிறோம். பரப்பில் பலத்தில் எவ்வளவு குறைந்திருந்தாலும், தனி அரசுத் தத்துவத்தின் தனி மாண்பை உணர்ந்தோரெல்லாம், தங்கள் பரப்பின் குறைவையும், பலத்தின் மெலிவையும் எண்ணி ஏங்கிக்கொண்டிராமல், உறுதியோடு போராடி வெற்றிபெறும் வழிகளையும் வாய்ப்புகளையும் பெற்றிடக் காண்கிறோம். இதனால், இன்று பலப்பல சிறு சிறு நாடுகள் எல்லாம் தனி அரசு பெற்றுத் திகழ்வதையும் காண்கிறோம்.

"திராவிடநாடு திராவிடருக்கே" என்ற இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்ட நாமும், நம்முடைய இலட்சியத்தை அடைவதற்காக எந்தெந்தத் துறைகளில் இறங்கி பணியாற்றி வெற்றி காணலாம் என்ற முறைகளில் **தேர்தலையும்** ஒன்றாகச் சேர்த்திருக்கிறோம்.

திருச்சி மாநாட்டுத் தீர்மானப்படி, தி. மு. க. தேர்தல் ஆய்வுக்குழு பன்னிரண்டு நாட்களுக்கு மேலாகத் தமிழ்நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து நல்ல—நம்பிக்கையான முடிவோடு சென்னை திரும்பியுள்ளது.

நூற்றைம்பது இடங்களுக்குக் குறையாதபடி. தி. மு. க. சார்பில் தேர்தலுக்கு நிறுத்தும் வாய்ப்பு இருப்பதைத் தேர்தல் குழு தெரிவித்திருக்கிறது. இது நமக்கு மகிழ்ச்சியை அள்ளிச் சொரிகிறதென்றபோதிலும், இந்தப் பெரியபொறுப்பை நம்மால் சுமக்க முடியுமா? இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வெற்றி காணும் வசதி நமக்கிருக்கிறதா என்ற கவலையும் நம்மைத் துளைக்காமல் இல்லை.

தேர்தலில் நிற்பது என்பது என்னவோ பேச்சளவோடு நின்று பெருமிதம் கொள்ளும் காரியமல்லவே! பெரிய பொறுப்பல்லவோ நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

150 இடங்களா? எண்ணும்போதே திகைப்பு உண்டாகிறது. முடியுமா நம்மால்—அதற்குரிய நிதி வசதி நம்மிடம் இருக்கிறதா என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமல் இந்தப் பெரிய பொறுப்பைச் சாதித்துவிடமுடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் காரியத்திலும் எண்ணித் துணியாமல் இறங்குவதில்லை; என்றபோதிலும் பணம் சம்பந்தப்பட்ட காரியமாகத் தேர்தல் இருப்பதால், நமது இயக்கத் தோழர்களின் ஆர்வம் இதில் மிக மிக அதிகமாகத் தேவை.

ஒவ்வொரு கிளைக் கழகங்களும் நான் முந்தி நீ முந்தி என்று தேர்தல் நிதி திரட்டுவதில் ஒன்றுபட்டுப் பணியாற்றி ஊக்கமளிப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. என்றபோதிலும் சுடர்விளக்குத்தானே தானாக எரியும் என்று இருந்துவிடக்கூடாதென்பதற்காகவே இதனை எழுதுகிறோம். எனவே கடமையை உணர்ந்து காரியமாற்றிப் பழக்கப்பட்ட நம் தோழர்களுக்கு அதிகம் எழுதத் தேவையில்லை.

இந்தத் தேர்தல் நமக்குப் புதிதுதான். தேர்தலில் நின்று நின்று பழக்கப்பட்டவர்களோடு போட்டியிடும் நிலையில்தான் இருக்கிறோம். என்றாலும், இந்தத் தேர்தல் ஒன்றுதான் நமது இலட்சியத்தை அடைய வழி என்பதல்ல. இலட்சியத்தை அடையும் சாதனங்களில் இதனையும் ஒன்றாகக் கருதி இதில் இறங்கியுள்ளோம்.

எனவே இதில் கிடைக்கும்வெற்றி நமது இலட்சியத்தை அடைய உதவுவதாக அமையும் விதத்தில் எதிர்க்கட்சிக்காரர்களோடு மோதிக்கொள்ளாத வகையில் நாம் எந்தக் காரியத்தையும்—தேர்தல் சம்பந்தப்பட்டவரையில் விழிப்போடு செய்தல் வேண்டுமென்பதை நமது தோழர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு பெரிய பொறுப்பு நம்மீது சுமத்தப்பட்டுவிட்டது என்பதை உள்ளத்தில்கொண்டு, தி. மு. க. ஆதரவாளர்களிடத்தில் மட்டுமல்ல, தேர்தல் விஷயமானதால், நம்மிடம் அனுதாபம் காட்டுவோரிடத்திலும், தேர்தல் சம்பந்தமாக ஒத்த கருத்தைத் தெரிவிப்பவர்களிடத்திலும், நமது கொள்கையை விட்டுக்கொடுக்காமல் பழகிப்பேசிப் பணம் திரட்டும் பணியில் ஈடுபடும்படி உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்—தேர்தலில் தி. மு. க. வெற்றிபெற்றால், நாட்டுக்கு நல்ல—தேவையான காரியங்களை செய்வதில், தனைய தாட்சணியம்—பயம பாசம் காட்டாது செயல்முறையைப் பின்பற்றி வெற்றிகாணக் கூடியது எனபதை நம்மீது அனுதாபமும் ஆர்வமும் காட்டும அனைவருக்கும் எடுத்துக்கூறி எல்லாவகையான ஆதரவுகளையும் பெறுவதில் நமது முன்னணி வீரர்கள் முனைந்து பணியாற்ற வேண்டும், என்று கேட்டுக்கொள்ளுகிறோம். செயல் வீரர்களாம் செம்மல்களுக்கு அதிகம் கூறத் தேவையில்லை—வெற்றி நமதே! ★

# காஞ்சீபுரம்

28—10—'56

# தம்பி !

எடுத்ததற்கெல்லாம் டில்லி அதிகாரத்தின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்றால், இங்கு நமக்கு ராஜ்யத்தில் பாராளும் மன்றம் என்ற ஒன்று எதற்கு? என்று கேட்கிறார், **அனுமந்தய்யா,** முன்னாள் முதலமைச்சர்.

மைசூர் ராஜ்யம், தமிழகத்தைக் காட்டிலும் தொழிற்துறையில் வளம் பெற்றது; என்றாலும், அங்குகூட, வடநாட்டு வளம் ஓங்கி வளருகிறது, தென்னகம் தேய்கிறது என்ற எண்ணமும், வடநாட்டின் அதிகாரத்துக்குத் தலையாட்டும் நிலைமைக்குத்தான், இங்கு 'ராஜ்யங்கள்' ஆக்கப்பட்டுள்ளன என்ற எரிச்சலும் இருக்கத்தான் செய்கிறது. அனுமந்தய்யா, இந்த எரிச்சலை, வெளியிட்டிருப்பது இது முதல் முறை அல்ல. பதவி பறிபோய்விட்ட ஆத்திரத்தில் இதுபோலப் பேசுகிறார் என்று அலட்சியமாகக்கூறி, உண்மையை மறைத்துவிடலாம் என்று சில காங்கிரஸ்காரருக்கு எண்ணம் ஏற்படும்—ஆனால், அனுமந்தைய்யா இப்போது மட்டுமல்ல, மைசூர் ராஜ்யத்தின் முதல் அமைச்சராக இருந்த நாட்களிலேயே கூட, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தைக் குறித்துத் தமது கண்டனத்தை ஒளிவு மறைவு இன்றிக் கூறியிருக்கிறார்—அவருடைய வீழ்ச்சிக்கு உள்ள பல காரணங்களில் இதுவும் ஒன்று என்று கருதுவோர் உளர்.

மைசூர் ராஜ்யத்தின் முதலமைச்சராக அவர் இருந்த நாட்களிலேயே, மத்திய சர்க்காரின் ஆதிக்கப்போக்கைக் கண்டித்ததால், அவர்மீது டில்லி அரசுக்கு ஒரு கடுப்பு வளர்ந்திருக்கக்கூடும்—மைசூர் ராஜ்யத்திலேயே அவருக்கு வேறு காரணத்தால் எதிர்ப்பு கிளம்பியதும், டில்லி, அவருடைய வீழ்ச்சியை 'அனுமதித்து' இருக்கக்கூடும். பெரிய இடத்து விவகாரம்—எனவே முழு உண்மை வெளிவருவது கடினம். ஆனால், ஒரு அரசின் முதலமைச்சராக உள்ளவர் தமது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் என்னென்ன முறையைக் கையாள வேண்டும் என்ற சாணக்கிய சூத்திரம் தெரிந்துகொள்ள அல்ல, இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுவது. நாடு அறிய வேண்டிய மிக முக்கியமான உண்மை, தன் ராஜ்யத்தின் நலனில் அக்கறை கொண்ட தலைவர் யாரும், மத்ய அரசு கொண்டுள்ள போக்கைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை, மனக் குமுறல் ஏற்படாமலில்லை, 'ஜாடை மாடை'யாக வேனும் பேசிக்காட்ட வேண்டி இருக்கிறது, என்பதுதான்.

சிலர் இதுபோலப் பேசத் தலைப்பட்டதும், டில்லி விழித்துக்கொள்கிறது—ஆசை காட்டியோ அச்ச மூட்டியோ, அவர்தம் வாயை அடைத்துவிட முடிகிறது.

கவர்னர்பதவிகளையும், வெளிநாட்டுத்தூதர் பதவியையும், பல்வேறு நாடுகளுக்குப் பவனி செல்லக்கூடிய கமிஷன் பதவிகளையும், வாரி வீசும் அதிகாரம் கையில் இருக்கிறது; முற்றுந் துறந்த முனிவர்களை மயக்கிட கடவுளே, தேவலோகக்

# நாமாவது.....!

கட்டழகிகளை ஏவுவாராமே! கடவுளின் செயலே இது வென்றால், ஆதிபத்ய ஆசை கொண்டவர்கள், பதவிப் பாவைகளை ஏவிவிட்டு, இவர்களை இளித்தவாயர்களாக்கி விடுவது, நடைபெறக்கூடாததாகுமா!! சபலம், யாரை விடுகிறது?

"மத்ய சர்க்கார்—மாகாண சர்க்கார் என்று பிரித்துப் பேசுகிறார் பிரபோ!"

"யார், அவ்விதம் பேசுபவர்?"

"இன்ன ராஜ்ய முதலமைச்சர்!"

"முதலமைச்சராக இருந்துகொண்டா அங்ஙனம் பேசுகிறார்? என்ன பேதமை, என்ன பேதமை!"

"என்ன போக்கிரித்தனம் என்று சொல்லுங்கள், பிரபோ! நமது தயவை நாடி, துதிபாடி, மற்றவர்கள் தமது ஆட்சியைக் காப்பாற்றிக்கொண்டிருக்க, இந்த முதலமைச்சர், எவ்வளவு துணிவுடன், நமது ஆதிபத்தியத்தைத் துச்சமென்று கருதி, யாரோ தம்மை மெச்சிக்கொள்ள வேண்டுமென்பதற்காக, மத்திய சர்க்கார்—மாகாண சர்க்கார் என்று பிரித்துப் பேசுகிறார், உரிமைபற்றிக் கதைக்கிறார்—இதை மகாப்பிரபோ! நாம் அனுமதிக்கலாகாது...ஆபத்தாகும், பிறகு! ஒரு இடத்திலே இந்தத்துணிவு ஏற்பட்டுவிட்டால், ஏற்பட்டது கண்டும் நாம் அதனைக் களைந்து எறியாமலிருப்பது தெரிந்துவிட்டால், மற்றவர்களும் கிளம்புவர் — பிறகு பாரதம், களமாகிவிடும். எனவே, இதனை உடனடியாக, அடக்கியாக வேண்டும்"

"வீண் பீதிகொள்கிறாய்! ஒரு முதலமைச்சர் முணுமுணுப்பதாலே, நமக்கு என்ன ஆபத்து நேரிட்டுவிடப் போகிறது; நாம் இதன் பொருட்டு, அந்த முதலமைச்சரை அடக்க முற்பட்டால், ஆ—ஊ—என்று கூவி, மற்றையோரையும் கிளப்பிவிட்டுவிடுவார்......"

"அதுவும் ஒரு வகையில் உண்மைதான்......ஆனால் நமது ஆதிபத்தியத்தைக் கண்டிக்கும் போக்கு வளரவிடலாகாது..."

"ஆமாம்! வளரவிடப்போவதில்லை..."

"எப்படி, மகானுபாவா!"

"எண்ணற்ற வழிகள் உள்ளன! அந்த முதலமைச்சருக்கு உள்ள ஆசாபாசங்களை அறிந்துவா; எந்தப் பதவிமீது மோகம் பிறந்திருக்கிறது; ரஷியாபோய்ப் பார்க்கப் பிரியம் ஏற்பட்டுவிட்டதா; பாரிஸ் பயணம் தேவையா; அமெரிக்கா சென்று ஆனந்தம்காண விருப்பம் எழுந்திருக்கிறதா; என்ன தான் புதிய பசி; என்பதை அறிந்துவா; அந்தப் பசிக்கு ஏதேனும் தருவோம்; வாய் தானாக மூடிக்கொள்கிறது; வாழ்த்தி வணங்க ஓடோடி வருவார்"

"எல்லோரும், இதேபோல இருப்பார்களோ"

"இது ஒன்றுதான், நமக்கு உள்ள முறையோ! பைத்யக்காரா! நமது அம்புறாத் தூணியில் இஃது மட்டுமா, இருக்கிறது.

ஆசைக்குக் கட்டுப்படாதவர் என்று தெரிந்தால், அச்சத்தை ஏவுவோம்...ஷேக் அப்துல்லா படம் ஒன்று அனுப்பி வைத்தால் தெரிந்துகொள்கிறார்"

"பலே! பலே! நானோர் ஏமாளி! தங்கள் முறையின் நுட்பத்தை அறிந்துகொள்ளும் ஆற்றலைப் பெற்றேன் இல்லை!"

மத்திய சர்க்காரிடம் அளவு மீறிய அதிகாரம் குவிந்து கிடக்கிறது; அதனால் ராஜ்ய சர்க்கார் தரம் இழந்து, திறம் அற்று, பெரியதோர்பஞ்சாயத்துபோர்டாக வாழ்க்கையை ஓட்டவேண்டி நேரிட்டுவிடுகிறது என்ற கருத்து குடையும் மனதினராகி, மனதிற்பட்டதை எடுத்துக்கூறும் துணிவினைப்பெற்றுவிட்டால், அவரைப் பற்றி, டில்லி தேவதைகள், இது போல் பேசிக் காரியமாற்றும் போலத் தெரிகிறது.

மகாவீர் தியாகி என்றோர் மந்திரி இருக்கிறார், டில்லியில் — இவர் டில்லி பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த நாட்களில், சர்க்காரின் செயலில், திட்டத்தில், போக்கில், காணக்கிடைக்கும் 'ஓட்டைகளை'க் காட்டிக் காட்டிச் சாடுவார்! பல இலாகாக்களிலே மலிந்துகிடக்கும் ஊழல்களை அம்பலப்படுத்துவார்! அமைச்சர்களின் தவறுகளைக் காட்டிக் கேலி பேசுவார். அவருடைய கேள்விகள், சர்க்கார் தரப்பினரைத் திணற வைத்திடும்! அவர் தரும் புள்ளி விவரங்கள், சர்க்காருக்கு மண்டைக் குடைச்சல் ஏற்படுத்தும்.

இந்தவிதமாக இடித்துக்கொண்டிருந்த தியாகி இப்போது அமைச்சராகிவிட்டார்!

ஏன்? அழைத்தார்கள்! எப்படி? அதுதான் இன்று டில்லி கையாளும் அரசியல் செப்படி வித்தை. தியாகியைத் தீர்த்துக் கட்ட வேண்டும்! தீபோலச் சுடுகிறார்; சர்க்காரின் போக்கைச்சாடுவதிலே சமர்த்தராக இருக்கிறார்; இவரை வெளியே விட்டுவைத்தால், இது போலத்தான் தொல்லை தந்தபடி இருப்பார்; எனவே இவரைப் பிடித்து 'உள்ளே' போடவேண்டும்; அமைச்சராக்கிவிடுங்கள், ஆசாமி பிறகு வெல்வெட்டு மெத்தையில் சாய்ந்துகொள்வார், எதிர்ப்பு மாய்ந்துபோகும்! — என்று டில்லி தீர்மானித்தது; தியாகிக்கு அமைச்சர் வேலை கிடைத்தது, சர்க்கார் தரப்புக்கு தலைவலி குறைந்தது.

உணவுத் துறையிலே அமைச்சராக உள்ள கிருஷ்ணப்பா என்பவரை, இப்படித்தான், கித்வாய் கண்டெடுத்தார், என்று, பெருமையுடன் பேசுகிறார்கள், கேட்கிறோமல்லவா! ரபி அகமத் கித்வாய், உணவுத்துறைக்கு மந்திரியாக இருந்தபோது கிருஷ்ணப்பா வெறும் உறுப்பினராக இருந்துகொண்டு, ஓயாது கேள்விகள் கேட்டுக் கேட்டுக் குடைவாராம்! கித்வாய், இந்த ஆசாமியை இழுத்துவாருங்கள் என்று கூறி, வந்தவருக்கு ஒரு வெல்வெட்டு மெத்தையைக் கொடுத்து, "உட்கார்! நீர் மெத்த சுறுசுறுப்பும் சூட்சமமும் உள்ளவர்! மந்திரிவேலை பாரும்!" என்றாராம், கிருஷ்ணப்பா இப்போது மந்திரியாகி, "பஞ்சமா? யார் சொல்வது, பொய்! பொய்! என்கிறார், விலை ஏறிவிட்டது, மக்கள் சொல்லொணாக் கஷ்டம் அனுபவிக்கிறார்கள் என்று முறையிட்டால், விலை ஏறினால் என்ன தானாக இறங்கிவிடும் — என்று சமாதானம் பேசுகிறார்.

இதே முறையிலே காரியமாற்றும் பழக்கம் ஏற்பட்டுவிட்டதால், மத்திய சர்க்காரின் போக்கை எவரேனும் கண்டிக்கக் கிளம்பினால், அவர்களை, ஆசை காட்டி, மடக்கிவிடலாம் என்ற நம்பிக்கை, டில்லிக்கு இருக்கிறது.

குறை கூறியும், கண்டனக் குரல் எழுப்பியும், உரிமை முழக்கமிட்டுக் கொண்டும், வெளியே தலைநீட்டுகிற காங்கிரஸ் தலைவர்களிலே, பலரும், தமது திருவும் உருவும் டில்லிக்குத் தெரிந்து, 'தூது' வராதா என்ற ஆசையினால் உந்தப்பட்டும், என்னை இப்படியே நீங்கள் வாளா இருக்கவிட்டுவிட்டால், வேறு வேலை இல்லாத காரணத்தாலும், அலட்சியப்படுத்திவிட்டார்களே என்ற எண்ணத்தாலும், நானும் ஏதாவது செய்யமுடியும், என்பதைக் காட்டித் தீரவேண்டிய அவசியத்தினாலும், மத்திய சர்க்காரின் போக்கை எதிர்த்துப் பேசக் கிளம்புவேன்—என்று டில்லிக்கு மிரட்டல் பாணம் ஏவ, இந்தப் போக்கினைக் கொள்கிறார்கள்.

இல்லையென்றால், மத்திய சர்க்கார் ஆதிக்கம்செய்கிறது, இது நியாயமல்ல, நல்லதல்ல; ராஜ்ய சர்க்காரின் தரமும் திறமும் கெட்டுவிடுகிறது என்று கூறிடும் அனுமந்தய்யாக்கள், நெஞ்சார இதை உணர்ந்து, நேர்மை வழி நின்று இதனை எடுத்துரைக்க முன்வருகிறார்கள் என்றால், இதற்குப் பரிகாரம் கூறவேண்டாமா? மக்களின் ஆதரவினை, இந்தத் தம் கருத்துக்குத் திரட்டிக்காட்ட வேண்டாமா? நாட்டுக்கான சட்டதிட்டங்கள் குறித்து, கலந்து பேசி முடிவெடுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகளிலே, இதுபற்றி, அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல் எடுத்துரைக்கவேண்டாமா? நேரு பண்டிதரிடம் வாதாடவேண்டாமா? செய்கின்றனரோ? இல்லை! வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் வாயடைத்து இருந்துவிடுகிறார்கள்; மத்ய சர்க்கார் என்ற முறையே இத்தகைய கொடுமையை, எதேச்சாதிகாரத்தை, சர்வாதிகாரத்தைத்தான் மூட்டிவிடும், எனவே தனியாட்சியாக ராஜ்யங்கள் இருத்தல் வேண்டும், ஒன்றுக்கொன்று நேசமாகவும் பாசத்துடனும், தோழமையுடனும் இருக்க வழிசெய்துகொள்ளலாம், ஒற்றுமையின் பேரால், இந்தக் கொடுமைக்கு இடமளித்துவிட்டு, மத்திய சர்க்காரிடம் எதற்கெடுத்தாலும் மண்டியிட்டுக் கிடக்கும் கேவல நிலைமை கூடாது, அதனைப்போக்கிக்கொள்வோம், என்று நாம் கூறும்போது, இதே அனுமந்தய்யாக்கள் பேசும் பாணி என்ன? பாரதம் ஒரு தேசம்—ஓர் அரசு—இந்த ஐக்யத்தை நாசம் செய்தல் கூடாது — என்றல்லவா பேசுகிறார்கள்!! நமது உரிமை முழக்கத்தை வரட்டுக் கூச்சல் என்று ஏசுகிறார்கள்; நமது 'தனிநாடு' கோரிக்கையை, 'நாட்டைப் பிளவுபடுத்தும் நாச சக்தி' என்கிறார்கள்!!

மத்திய சர்க்கார், தலையிட்டுத் தொல்லை தருகிறது—எதற்கெடுத்தாலும் டில்லி உத்தரவு பிறப்பிக்கிறது, நாம் அதன் கட்டளைப்படி ஆடவேண்டி இருக்கிறது — செச்சே! இது மகா கேவலம்!—என்று பேசிக் கைபிசைந்து கொள்ளும் இந்தக் கண்ணியவான்கள், ஆசைக்கு ஆட்படாமலும் அச்சத்துக்கு இடமளிக்காமலும், கொள்கைக்கு மதிப்பளித்து, மக்கள் மன்றத்திலே அந்தக் கொள்கைக்கு ஆதரவு திரட்டிவரும், நம் போன்றார்மீது காய்வது ஏன், பாய்வது எதன்பொருட்டு!!

பாரதம் ஒரு தேசம் — என்ற தத்துவத்தைப் பேசும்போதும், இவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்கள்! மத்ய சர்க்கார் எதிலும் குறுக்கிடுகிறது, எதற்கெடுத்தாலும் கட்டளை பிறப்பிக்கிறது, நாங்கள் கைகட்டிச் சேவகம் செய்யவேண்டிய கேவலம் ஏற்படுகிறது என்று மனக் குமுறலுடன் பேசும்போதும், அவலை நினைந்துகொண்டு உரலை இடிக்கிறார்களே தவிர கொள்கைப் பற்றினால் செயலாற்றக் கிளம்புகிறார்கள் இல்லை!

குமாரசாமி ராஜா, கவர்னர் கோலத்திலேயே கோவை வந்ததும், அங்கு பிரமுகர்களும் தொழில் அதிபர்களும் கூடியிருந்த ஓர் அவையில், டில்லியின் போக்கினையும், தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும், வடநாட்டு அணைத் திட்டங்களில் பணம் பாழாக்கப்படுவதையும், கேட்போர் பதறித்துடித்து எழும் விதத்தில் பேசியதையும், அறிவாய்.

**"இவ்வளவுதான் என்று எண்ணாதீர்கள்! இன்னும் சொல்ல வேண்டியவை ஏராளமாக உள்ளன. இந்த கவர்னர் வேலையிலிருந்து விலகியதும் அவ்வளவையும் சொல்லிவிடுகிறேன்"** என்றல்லவா முழக்கமிட்டார்.

பத்திரிகைகளெல்லாம் பத்தி பத்தியாக வெளியிட்டன; கொட்டை எழுத்திலே தலைப்புகளிட்டன; குமாரசாமிராஜா இவ்விதம் பேசிடக் காரணம் என்ன என்பது பற்றி 'நிருபர்கள்' தமது கருத்துகளைத் தொகுத்தனர்; நாட்டு மக்கள், வியந்தனர்; பலர் பாராட்டினர்; இஃதன்றோ அஞ்சா நெஞ்சம்! கவர்னர் பதவியில் இருப்பதாலேயே கண்மூடி மௌனியாகிவிடமாட்டேன்! அக்ரமமும் அநீதியும் கண்டால், எடுத்துக் காட்டிக் கண்டிக்கத்தான் செய்வேன்! என்று கூறிடும் போக்கில்லவா குமாரசாமிராஜா பேசியிருக்கிறார். தென்னாட்டுத் தலைவரில் ஒருவர் இப்படி வீரதீரமாகப் பேசுகிறார் என்பதறிந்தால், வடநாட்டுச் சர்வாதிகாரிகள்கூடச் சிறிதளவாவது அச்சம் கொள்வார்கள்; எதையோ காட்டி மயக்கிவிடலாம் என்று யாரைக் குறித்து வேண்டுமானாலும் நம்பலாம், குமாரசாமி ராஜா அப்படிப்பட்டவரல்ல, கவர்னர் வேலை கொடுத்தோம், அதிலே இருந்துகொண்டே நமது போக்கைக் கண்டிக்கிறார், ஏ! அப்பா! பொல்லாத ஆசாமி! இவரிடம் நாம் சர்வ ஜாக்ரதையாக நடந்துகொள்ளவேண்டும், என்றெல்லாம் வடநாட்டுத் தலைவர்கள் எண்ணிக் கொள்வார்கள்; இப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சு படைத்தவர் முதலமைச்சராக இருந்தால், தேவிகுளம் பீர்மேடு பறிபோகுமா, திருத்தணி திருப்பதியை இழந்து நிற்போமா, என்றுகூட எண்ணிக் கொள்வார்கள்; அவ்வளவு பட்டவர்த்தனமாகப் பேசினார், கவர்னர் பதவியில் இருந்துகொண்டே! ஆனால்...? என்ன ஆயிற்று!

இலவு காத்த கிளி என்பார்கள், அந்த உவமை போதவில்லை!!

(15-ம் பக்கம் பார்க்க)

# சுயேச்சை ஆகிவிடுவேன்....!

### காட்சி 4

இடம்:- கூடம்

இருப்போர்:-கமிட்டித் தலைவர்,
உறுப்பினர்கள்,
உள்ளூர்க் காங்கிரஸ்,
கனகசபாபதி.

நிலைமை:— [அனைவரும் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டுள்ளனர். கமிட்டித் தலைவர் பேச்சிமுத்து, எதையோ படிப்பதும், பக்கத்தில் உள்ளவரிடம் இரகசியமாக எதையோ கேட்டுக் குறித்துக்கொள்வதுமாக இருக்கிறார்.
கனகசபாபதி ஒவ்வொருவரிடமும் உபசாரம் பேசியபடி இருக்கிறார்]

பேச்:- முதலிலே, நாம் எல்லோரும் நம்ம கனகசபாபதிச்செட்டியார் நமக்கு அளித்த விருந்துக்காக அவருக்கு நன்றி கூறிக்கொள்ளணும்...

கன:- இதென்னங்க,பிரமாதமான விருந்தா..... இதற்காக எனக்கு நன்றி கூறணுமா...

பேச்:- அது எங்கள் கடமை... இல்லையா...

அனை:- ஆமாம்... ஆமாம்...

ஒரு:- ஒரு சிறு திருத்தம்...

பேச்:- என்னய்யா, ஆரம்பத்திலேயே...

இன்னொ:- அது அவருடைய வழக்கமாச்சே...

பேச்:- என்ன, திருத்தம் சொல்லிவிடுமே...

ஒரு:- விருந்து நடத்திய கனகசபாபதிச்செட்டியாருக்கு நன்றிதெரிவிப்பதோடு, விருந்தை மிகச் சுவையுள்ளதாக்கிய சமையல் சபேச ஐயருக்கு நமது பாராட்டுதலைத் தெரிவிக்கிறோம்...

பேச்:- பேஷ்' பேஷ்! உண்மையான பேச்சுத்தான்... எவ்வளவுபணம் செட்டியார் செலவழித்தாலும், விருந்து சுவையாக இல்லாமற் போயிருந்தால் நஷ்டம், கஷ்டம் ...

இன்:- அதனாலேதான், என் திருத்தம்...

வேறொ:- ஒரு விஷயம்...

பேச்:- என்னய்யா இது.....திருத்தத்துக்குத் திருத்தமா...

வேறொ:- ஆமாங்க... சமையல்சபேச ஐயர் பாராட்டப்படவேண்டியதுதான்... ஆனால் சாம்பாரில்உப்பு

### அண்ணாதுரை

கொஞ்சம் அதிகமாகப் போட்டதற்குக் கண்டித்துவிட்டு, மத்ததுக்காகப் பாராட்டலாம்...

[அனைவரும் சிரிக்கின்றனர்]

உத்த:- இது என்ன, எலக்ஷன் விஷயமான கமிட்டியா, அல்லது சமாராதனைக் கமிட்டியா...

பேச்:- என்ன, உத்தண்டம்! பொழுதுபோக்கும் இருக்கவேண்டுமே... சதா சர்வகாலமும் சுடுமூஞ்சிகளாகவா இருப்பது...

உத்:- யாரய்யா, சுடுமூஞ்சி! வார்த்தைகளை அளந்து பேசவேணும்...

கன:- என்ன, உத்தண்டன்! இவ்வளவு கோபம்...

உத்:- செட்டியாரவாள்! நீங்கள் ஒன்றும் குறுக்கிடவேண்டாம்; காரியத்தைக் கவனிக்கலாம்...

பேச்:- சரி... இந்தத் தொகுதிக்கு, காங்கிரஸ் சார்பாக, யாரை நிறுத்தலாம் என்பது குறித்து யோசித்து முடிவு செய்யக் கூடியிருக்கிறோம்...

உத்:- காங்கிரஸ் சார்பாகவா? காங்கிரஸ்காரரையா?...

பேச்:- எனக்கு அந்த வித்தியாசம் தெரியாது...காங்கிரசுக்காக என்று வைத்துக்கொள்வது... யார் நின்றால் நல்லது...

உத்:- யார் நின்றால் வெற்றி கிடைக்கும் என்று யோசிக்கப்போகிறீர்களா...

பேச்:- தோலவிக்கு எது வழி என்றா யோசிப்பார்கள்?

உத்:- வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படாமல், காங்கிரசினுடைய கௌரவம் கெடாதபடியான முறையில், அபேட்சகர் நிறுத்தப்பட வேண்டுமே...

பேச்:- உமது யோசனை அது...சரி ...மற்றவர்கள் சொல்லட்டும்... காளி உன் யோசனை என்ன?

காளி:- வெற்றி கிடைக்கவேண்டும் ... அப்போதுதான் காங்கிரசின் கௌரவம் நிலைக்கும்... ஆகவே, வெற்றிபெறத்தக்க வாய்ப்பு, வசதி, வல்லமை, ஆள் சட்டு, பணபலம், இவைகள் உள்ளவர்கள் யார் என்று பார்த்து...

உத்:- காங்கிரசுக்கும் அவருக்கும் எப்போதும் ஒட்டு உறவும் இருந்ததில்லை என்றாலும், ஊரிலே, சுரண்டிக்கொழுப்பவர், சுயநலவாதி பிற்போக்காளர், என்று கெட்ட பெயர் இருந்தாலும், அவரைக் காங்கிரஸ்பேரால் நிறுத்துவது... காளி! உன் யோசனை அதுதானே...

காளி:- வக்கணை பேச எனக்கும் தெரியும்... அடிபட்டவன் உதைபட்டவன், ஜெயிலுக்கு அஞ்சு

தடவை போனவன் ஆறு தடவை போனவன் என்று காரணம் காட்டி, காசு இல்லாத பேர்வழியாகப்பார்த்து நிறுத்தி, தோற்று, அதன் மூலம் காங்கிர சின் மானம் கப்பல் ஏறும்படி செய்யட்டும்... எனக்கென்ன...

பேச்:- ஒருவரை ஒருவர் குறை சொல்லிக்கொண்டே போனால் நல்லதா...

கனக:- குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை...

பேச்:- அடே! செட்டியாருக்குத் தமிழ் ஞானம் நிரம்ப இருக்கிறதே...

கோ:- எங்கள் ஊர் தேவார பாடசாலைக்கு அவர்தான் ஜீவன்...

கனக:- போனமர்தம், திருக்குறள் கழகம்கூட ஆரம்பித்திருக்குது ...எப்போதும் தமிழ் என்றால் எனக்கு உயிர். நம்ம தொகுதியில் தமிழ்ப்பற்று அதிகம்...

பேச்:- தமிழாசிரியர்கள் உண்டா..?

கனக:- எல்லாம் எனக்கு நண்பர்கள்... புராண காலட்சேபக்காரர்கள், ரொம்ப ரொம்ப வேண்டியவர்கள்.

பேச்:- இந்தத் தொகுதியில்தானே முருங்கப்பட்டி...?

கனக:- ஆமாம்... முருங்கப்பட்டியிலேதான் நம்மோட முந்திரித் தோப்பு இருக்கு...நமக்கு அங்கு நல்ல செல்வாக்கு...

உத்:- அந்த முந்திரித் தோப்பிலேதான் கள்ள்ச்சாராயம் காய்ச்சினதாக மூன்று மாதத்துக்கு முன்பு போலீஸ் படை எடுத்தது.

கனக:- எவனோ, பொறாமைக்காரப் பயல்கள், நம்ம கார் ஷெட்டிலே கொண்டுவந்து ஐந்தாறு பாட்டில்களை ஒளியவைத்துவிட்டார்கள்......வேறொன்றுமில்லை...... ஆண்டவனோட புண்யத்தாலே, ஒரு குறையும் நேரலிங்க...

உத்:- இவருக்கு ஒருகுறையும் நேரவில்லை... ஆனா... இன்ஸ்பெக்டர் இலஞ்சம் வாங்கிக்கொண்டு, இவர் மீது கேஸ் போடாமல் விட்டு விட்டார் என்று புகார் கிளம்பி, அந்த இன்ஸ்பெக்டரைத் தூக்கி, ஆந்திராப் பக்கம் போட்டுவிட்டாங்க...

கனக:- அபாண்டமான பழி...சரி ......எதையோ சொல்லிக் கொண்டுபோ, உப்பு! நான் ஒண்ணும், என்னை அபேட்சகனாகப் போடுங்கன்னு கெஞ்சவில்லை, கூத்தாடவில்லை; நடையா நடந்தாங்க, காளியும் கோபாலும்; நமக்கு ஏனப்பா ஊர் வம்பு, நான் வேணுமானா காங்கிரசுக்கு ஒரு ஆயிரமோ இரண்டோ கொடுத்துவிடறேன், நம்மை இழுத்து விட்டுவிடாதிங்கன்னு சொன்னேன்...

காளி:- அவர் நின்றால்தான் காங்கிரசுக்கு சான்சு என்பதாலே அவரை நாங்கள் விடவில்லை...

கனக:- நீங்க, அப்படி நினைக்கிறிங்க—தம்பி உத்தண்டன் நான் அதுக்கெல்லாம் தகுதியில்லேன்னு கோவிக்குது...என்னாலே, உங்களுக்குள்ளே ஏன் பேதம், பிளவு...தம்பி, உத்தண்டம்! உன் மனசு போலவே நடக்கட்டும்...நம்ம தலைக்கு நீ ஒண்ணும் கிரீடம்வைக்கவேண்டாம் ...நமக்கு இப்போது இருக்கிற அந்தஸ்தே போதும்...

பேச்:- செட்டியாரவாள்! விரக்தியும் வெறுப்பும் ஏற்படலாமா...உத்தண்டன் தன்னோட அபிப்பிராயத்தைச் சொல்றார்; சொல்லட்டும்; மற்றப்பேர் இருக்கா; அவாளோட அபிப்பிராயம் கேட்போம்...

[ஒருவர் உள்ளே வருகிறார், பேச்சிமுத்து, அவரை வரவேற்று அருகே உட்காரவைத்து]

பேச்:- எனக்கு வேலையே ஓடவில்லை, என்னடா இன்னும் எட்வர்டு காணமே, காணமேன்னு, அதே யோசனையா இருந்துது...

எட்வர்டு:- மாநாடு........நான்தான் கடைசிப்பேச்சாளி......நேரமாகிவிட்டது...

பேச்:- கழகம் அந்த இடத்திலே வலிவாமே...

எட்:- ஆமாம்.......அதனாலேதான் வெளுத்துவாங்கிவிட்டேன்...... என்னடா கழகம் உங்களோட கழகம்? காங்கிரஸ், வெள்ளைக்காரனோடு போராடியபோது, எங்கே போயிருந்திங்க...அந்தக் காலத்திலே, கள்ளுக்கடை காண்ட்ராக்ட் நடத்தினவன், ரோடு காண்ட்ராக்ட்டிலே கொள்ளை அடிச்சவன், கள்ள மார்க்கட்காரன், கலெக்டருக்குச் சலாமடிச்சவன், கதர்கட்டினவனைக் கண்டா, சீறிச் சீறி விழுந்தவன், இப்படிப்பட்டவனுங்க கழகம்னு பேர்சொல்லிக்கொண்டா வர்ரிங்க...ன்னு கேட்டேன்...

உத்:- ஜனங்க, என்ன சொன்னாங்க...?

எட்:- ஒரே கரகோஷம்......கழகம் என்றுபெயர்வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட ஆசாமிகள் வந்தா, யார் ஆதரிப்பார்கள்? "ஆதரிப்பீர்களா?" என்று கேட்டேன்......முடியாது! முடியாது! என்று இடிமுழக்கம் போலப் பதில்...

பேச்:- கேட்கணுமா......எட்வர்டு பேசினா கோட்டை கொத்தளம் எல்லாம் தூள்தூள்தானே...

உத்:- காங்கிரஸ் விரோதி கதர் கட்டாதவன், கள்ளமார்க்கட்காரன், கலெக்டர் பின்னோடுசுத்திக்கொண்டு திரிந்தவன், கொள்ளை அடிச்சவன், ஏழையைக் கெடுத்தவன், இப்படிப்பட்டவங்க, எட்வர்டு! கழகத்திலே இருந்தாமட்டும்தான், மக்களுக்கு வெறுப்புப்பிறக்குமா,... இல்லையானா...... பச்சோந்திகள் பகற்கொள்ளைக்காரன், வெள்ளைக்காரனுடைய குலாமாக இருந்தவன் இப்படிப்பட்டவன், காங்கிரஸ்அபேட்சகராக நின்றா, மக்கள் வெறுக்கமாட்டார்களா? விரட்டி அடிக்கமாட்டார்களா?

எட்வ:- அப்படிப்பட்டவர்களை, நாம் காங்கிரஸ் பேரால் நிறுத்துவோமா? நமக்கென்ன புத்தி கிடையாதா? மான மரியாதையில் அக்கரை கிடையாதா? காங்கிரசுக்கு நாம் துரோகம் செய்வோமா? உத்தண்டன்! உனக்கு ஏன், அப்படிப்பட்ட சந்தேகம் வந்தது?

உத்:- நான் ஒரு பைத்யக்காரன்,

எட்வர்டு! பைத்யக்காரன்! பிழைக்கத் தெரியாதவன்! அது கிடக்கட்டும்! காங்கிரசுக்கு விரோதியாக இருந்து, எதிர்த்து, இழிவு படுத்தி, வெள்ளைக்காரனுக்கு குலாமாக இருந்து கொள்ளை அடித்துக் கொழுத்த ஒரு ஆசாமி, இந்தத் தொகுதியிலே நின்றால்தான், வெற்றி கிடைக்கும் என்றால், அவரைத் தானே காங்கிரஸ் அபேட்சகராகப் போடவேண்டும்...

எட்வ:- செச்சே! மானக்கேடு! மேடை ஏறி நான் எப்படி மக்களிடம் முகத்தைக் காட்டுவேன்.

உத்;- காங்கிரசின் போராட்ட காலத்தில் இல்லை என்ற குற்றம் சாட்டித்தானே, கழகத்தை எதிர்க்கிறோம்...

எட்வ:- ஆமாம்......அதுதான் நமக்கு ஆயுதம்...

உத்:- மற்றப்படி, அண்ணா, துரை ஆயிரம் ரூபாய் சப்பளம் வாங்கிக்கொண்டு வெள்ளைக்காரனுக்குக் குலாம்வேலை பார்த்தான், நெடுஞ்செழியன் போலீஸ் சார்ஜண்டு வேலைபார்த்து காங்கிரஸ் தொண்டர்களை உதைத்தான், சம்பத் பட்டாளத்தில் இருந்து கொண்டு, காங்கிரஸ் தியாகிகளைச் சுட்டுத் தள்ளினான், கருணாநிதி கள்ள மார்க்கட் நடத்தினான், ஆசைத்தம்பி கொள்ளை இலாபம் அடித்தான், சிற்றரசு திவான்பகதூர் பட்டம் பெற ஆலாய்ப் பறந்தான், காஞ்சி—கலியாணம் கட்டிட காண்ட்ராக்டில் கால் கோடி தட்டினான், நடராசன் நாட்டைக் காட்டிக் கொடுத்து 'ராஜா'வானான்... என்று இப்படி ஒன்றும் குற்றம் சொல்ல முடியாதல்லவா...

எட்வ:- இதென்ன கேள்வி உத்தண்டன்! அப்படி எல்லாம் சொல்ல முடியுமா?

உத்:- கள்ளமார்க்கட் நடத்துபவன், கொள்ளை இலாபக்காரன், வெள்ளைக்காரனுக்கு குலாம் வேலை பார்த்தவன், கழகத்தில் இல்லை, எட்வர்டு, கழகத்தில் இல்லை; நம்மோடு இருக்கிறார்கள்; இங்கே இருக்கிறார்கள்;

கனக:- பேச்சிமுத்து அவாளுக்குத் தான்! மட்டு மரியாதையை மீறிப் பேச்சு வளருது... நான் ஒண்ணும் பக்கிரி இல்லா, கண்ட பயல்களிடம் பேச்சுக் கேட்க...

எட்:- என்ன இது...உத்தண்டன் ...

கனக:- கமிட்டி முடியட்டும்...

உத்:- கை காலை ஒடித்துவிடச் சொல்லி ஆளை விடுவே...... வேறென்ன...வழக்கமான வேலை தானே...

எட்:- உத்தண்டன்! இவருக்கும் உனக்கும் என்ன விரோதம்?



உத்:- சொந்தத்தில் ஒரு விரோதமும் இல்லை. நீ, மேடை மேடையாக முழக்கம் செய்கிறாய், காங்கிரஸ் விரோதிகள், கள்ளமார்க்கட்காரர், கொள்ளை இலாபக்காரர், வெள்ளைக்காரனுக்கு குலாம் என்று...அது அவ்வளவும் உருண்டு திரண்டு, இதோ ஓர் உருவாக நிற்கிறது...சாட்சாத் கனகசபாபதிச் செட்டியார் என்ற பெயரில்! இவர், இந்தத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராம்...எட்வர்டு! இதைச் சகித்துக்கொள்ள முடியுமா...... இதற்கா வாலிபத்தைப் பாழாக்கிக்கொண்டு, சிறையில் அடைபட்டுக்கிடந்தோம்...

கனக:- போக்கிரித்தனமாகப்பேசிக் கொண்டு, என் வீட்டிலே இருக்க என்ன துணிவடா உனக்கு...டேய்! உப்பு...உன் முதுகுத்தோலை உரித்து, உப்புத் தடவிவிட எத்தனை நேரம் பிடிக்கும்...

எட்வ:- சும்மா துள்ளாதே ஐயா! உன் வீட்டுக்கு நாங்கள் ஒன்றும் உபசாரம் கேட்டுக்கொள்ள வரவில்லை...எங்கள் கமிட்டி கூடியதால் வந்தோம்...கையை நீட்டி நீட்டிப் பேசுகிறீரே...உமக்குத்தான் தெரியுமா. உத்தண்டன்மீது நீர் கைவைத்தால், எங்கள் கை ஒன்றும் பூ பறித்துக்கொண்டிராது...

பேச்:- அமைதி! அமைதி! எட்வர்டு! இதென்ன, இப்படி அசங்கியம் செய்வதா...... ஜனநாயகம் வேண்டாமா... இதோ கனகசபாபதிச் செட்டியார் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப்பட வேண்டும் என்ற பிரரேபணையைக் காளி கொண்டுவருகிறார்...

உத்:- நான் எதிர்க்கிறேன்...

பேச்:- உட்கார்! உட்கார்! துளி கூட ஜனநாயக ஞானம் இல்லையே, உனக்கு...இப்படி நடந்துகொண்டால் கூட்டத்திலிருந்து வெளியேற்றிவிடுவேன்...

உத்:- ஹை! ஹை!......சபா நாயகர்...

பேச்:- ஒருதீர்மானம்கொண்டு வந்தால் ஒருவர் பிரரேபித்து, இன்னொருவர் ஆமோதிக்கணும்—பிறகுதான் எதிர்ப்பு இதிர்ப்பு எல்லாம்... தெரிகிறதா...காளி! உன் தீர்மானத்தை ஆதரிப்பது ......

கோபா:- நான் ஆதரிக்கிறேன்...... கதர்ஸ்டோர் கோபாலன்...

கன:- தலைவருக்கு ஒரு வார்த்தை! எனக்கு மனசு இடந்தரவில்லை. என்னைக் குறித்து மட்டரகமாகப் பேசுகிற ஆள் இந்தக் காங்கிரசிலே இருக்கிறபோது, எனக்குக் காங்கிரஸ் டிக்கட் வேண்டாமுங்க. ஏதோ பகவானுடைய புண்யத்தாலே, எனக்குக் கொஞ்சம் செல்வம் இருக்கு, செல்வாக்கும் இருக்கு, நான்

சுயேச்சையாகவே தேர்தலிலே நின்னு பார்த்துவிடறேனுங்க...

**பேச்:-** செட்டியார்வாள், பத்துப்பேர் கூடும் இடத்திலே, இதெல்லாம் சகஜம். இதற்கெல்லாம் சங்கடப்படலாமா...? கமிட்டியிலே மெஜாரடின்னு ஒண்ணு இருக்கேல்லோ...உட்காருங்க...

**பேச்:-** சரி! இந்தத் தொகுதிக்கு கனக சபாபதிச் செட்டியாரை நிறுத்தக் கூடாதுன்னு அபிப்பிராயப் படுகிறவா...

**உத்:-** நான்.....காரணம் காட்டுகிறேன்...

**பேச்:-** கையைத் தூக்கினால் போதும்...ஓஹோ! எட்வர்டு அவாளுமா? சரி, இரண்டுபேர்... மத்தப்படி, யார் இருக்கா?

**காளி:-** ஆதரவுக்கு எத்தனை 'ஓட்டு'ன்னு பாருங்கோ...

**பேச்:-** கனகசபாபதிச் செட்டியாரைக் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தலாம் என்பதை ஆதரிக்கிறவா கைதூக்கலாம்...

[பலர் கரங்களை உயர்த்துகிறார்கள்]

**பே:-** ஒண்ணு, ரெண்டு மூணு, ஆறு, பதினாலு, இருபத்திரண்டு...

[பலத்த கைதட்டுதல்]

**பே:-** கனகசபாபதிச் செட்டியாருக்கு ஆதரவாக 22-ஓட்டுகள்—எதிர்ப்பு 2—கனகசபாபதிச் செட்டியாரைக்காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்துவது என்று இந்தக் கமிட்டி முடிவு செய்கிறது!...

[கனகசபாபதி செட்டியாருக்கு ஜே! என்று பலர் கூவுகிறார்கள். எட்வர்டும், உத்தண்டனும், சோர்வுடன் வெளியே போய்விடுகிறார்கள்,]

**கனக:-** ஏலே, டே, சுடலைமுத்து...

[சுடலைமுத்து வருகிறான்]

**கனக:-** ஐயரை, டிபன், காபி, கொண்டுவரச் சொல்லேண்டா, எருமை...

**சுடலை:-** இதோ...

**பேச்:-** காலையிலே சாப்பிட்ட விருந்தே, இன்னும் ஜீரணம் ஆகல்லே...டிபன் எதற்கு...

**கன:-** பிரமாதமா ஒண்ணும் செய்துவிடலிங்க......குலோப்ஜானும், காரசோமாசும்தான்...

[அப்பா! அப்பா! என்று கூப்பிட்டபடி, சிறுமி பானு, கவுனும் தொப்பியும் அணிந்துகொண்டு வருகிறாள். கனகசபாபதிச் செட்டியார் முகத்தில் சிறிது அசடு தட்டுகிறது]

**பேச்:-** உம்ம, மகளா...பலே! பலே! குழந்தைக்கு யூரோபியன்டிரஸ் பிரமாதமா இருக்கே...பெயர் என்னம்மா...?

**சிறுமி:-** பானு...

**பேச்:-** (குழந்தையைத் தட்டிக் கொடுத்து)

பலே, ஜோரான பேர்! செட்டியாரவாள், நம்ம ஜவார்லால் பேரப்பிள்ளைகளைப் பார்த்ததில்லையே, படத்திலே...

**கனக:-** இல்லிங்களே...

**பேச்:-** வெள்ளைக்காரப் பசங்க கெட்டானுக, போங்க... அவ்வளவு 'டிப்டாப்'பா இருப்பாங்க...

**கனக:-** டில்லியிலே இருக்கறாங்க, இல்லிங்க...

**பேச்:-** யாரு? பசங்களோட அம்மா அப்பா எல்லாம் டில்லியிலே இருக்கிறாங்க... கொழந்தைகள், சீமையிலே படிக்குதுங்க...

**கனக:-** தாய் தகப்பனை விட்டு பிரிஞ்சி இருக்குதுங்களே...

**பேச்:-** அதெல்லாம், நம்ம நாட்டிலே தான், பசங்களை, மெட்ராசிலே படிக்கவைக்கறதுன்னாலும், பயம், பாசம், இதெல்லாம். வெள்ளைக்கார தேசத்திலே இதெல்லாம் சகஜம்... பசங்களுக்கென்ன, தாத்தாதான் மாதத்துக்கு ஒரு தடவை சீமை வர்ராரு...பார்க்க, கொஞ்ச, விளையாட 'சான்சு' தானே...

[டிபன் சாப்பிட்டான பிறகு, அனைவரும் கலைந்து செல்கிறார்கள்.

நீலாம்பிகை வருகிறாள்...]

**நீலா:-** என்ன, உங்களோட, தர்பார் முடிஞ்சுதா...

**கனக:-** என் தர்பாருக்கு என்ன குறைச்சலாம்.

**நீலா:-** செய்துபோட்ட விருந்துச் செலவுக்கு கிடைக்கவேண்டிய இலாபம் கிடைச்சுவிட்டுது போலிருக்கு, மூகம் ஜொலிக்குதே... என்ன... உங்களைத் தான், நிறுத்தறாங்களா எலக்ஷனிலே...

**கனக:-** ஆமாம்...நிச்சயமாயிட்டுது.

**நீலா:-** ஐயாமாரு எல்லாம் கூச்சல் போடுகிறாங்கன்னு, சுடலை வந்து சொன்னான்... என்ன கூச்சல்...

**கனக:-** ஒண்ணுமில்லை... இந்த வெட்டிப்பய ஒருத்தன் இல்லே, உப்பு. உத்தண்டன், அவன் என்னை எதிர்த்துப் பேசினான்.

**நீலா:-** அவன்கெட்ட கேட்டுக்கு, உங்களைவேறே எதிர்த்தானா...

**கனக:-** நான், கண்டிப்பாச் சொல்லிப்போட்டேன்...என்னை நீங்க காங்கிரசிலே எடுத்தா எடுங்க... இல்லைன்னா நான் சுயேச்சை ஆகிவிடுவேன்னு — ஒரு போடு போட்டேன், அவ்வளவுதான்— கமிட்டி, கப்சிப். செட்டியார்தான் நிற்கணும், மறுக்கக்கூடாதுன்னு ஒவ்வொருத்தனும், கெஞ்சறான், கூத்தாடறான். சரி, ஓட்டுக்கு விடுங்கோ, பார்க்கலாம்னு சொன்னேன்...

**நீலா,-** ஓட்டுவேறே எடுத்தாங்களா?

**கனக:-** ஆமாம் – செட்டியார்தான் வேணும்னு 22-ஓட்டு —வேண்டாம்னு 2-ஓட்டு.

**நீலா:-** அபாரமான வெற்றிதான்... நான் தும்பா கோயிலுக்குப் போய், அர்ச்சனை செய்துவிட்டு, அப்படியே அமிர்தம் சினிமா போகலாம் வா அக்கா! வா அக்கான்னு தொல்லை செய்றா, அதனாலே, சினிமாவுக்கும் போயிட்டு, வர்ரேன்...

**கனக:-** சரி...வெற்றிக்கொண்டாட்டம்...

**நீலா:-** நீங்கபாட்டுக்கு, சுடலை! சுடலைன்னு கூச்சல்போட்டுகிட்டு இருக்காதிங்க......நான் துணைக்கு அழைச்சிகிட்டு போறேன்...

**கனக:-** சரி...உடம்பு ஒரே எரிச்சல் ...குளிச்சா பரவாயில்லை...

**நீலா:-** குள்ளிவேணுமா? நான் சினிமாவுக்குப் போறது, குள்ளி இங்கே இருக்கறது... உனக்கு எப்போத்தான் இந்தப் பைத்யம் விடுமோ தெரியல்லை... உன் சுபாவம் எனக்கா தெரியாது... குள்ளியை நான் ஒரு மணி நேரத்துக்கு முந்தியே, வீட்டுக்கு அனுப்பியாச்சி.

★

# பனியூரில்.......!

குளமாவது, மேடாவது! இங்கிருந்தால் என்ன, அங்கு இருந்தால் என்ன? என்று எல்லோருமேவா பேசிக்கொண்டிருப்பார்கள். தத்தமது நாட்டு மக்களுக்கு உரிமையானவைகளை விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதிலே, அக்கரையும்; பாதுகாக்க வேண்டும் என்பதிலே ஆர்வமும், உரிமை பறிபோகாமலிருப்பதற்கான விழிப்புணர்ச்சியும் ஒவ்வொரு நாட்டுத் தலைவரும் பெற்றிருக்கிறார்கள்!

அவர்களெல்லாம் 'பேயர்கள்' நமது நாட்டிலேமட்டுமே ஒரு பெருங்குணவான் இருக்கிறார், அவருக்கு, குளமோ! மேடோ! உடைமையோ, உரிமையோ! திருப்பதியோ திருத்தணிகையோ! எது எங்கு எப்படி இருப்பினும், கவலை குடையாது; போனதுபோக மிச்சம் தமது பரிபாலனத்தில் இருக்க வேண்டும் என்று மட்டும் அக்கரை காட்டுவார்; தமிழர் தம் உரிமையைப் பறித்துக்கொண்டவரிடம்கூடத் தேனொழுகப் பேசுவார். ஐயா! இப்படி உரிமையைப் பறிகொடுக்கலாமா? உறக்கம் போதும்! எழுந்திருந்து நியாயம் கேட்டுப்பெறவாரும்! என்று எவரேனும் கூறினாலோ 'தேளாக'க் கொட்டுவார்!

அப்படிப்பட்ட அபூர்வ மனிதரைப் பார்த்து வரும் நமக்கு, உலகில் உரிமைக்கும் உடைமைக்கும், நாயகத் தன்மானத்துக்கும் தளராது உழைத்து, எதிர்ப்புத் தணலில் கருகிப் போகவும் துணிவு பெற்று விளங்கும் தலைவர்கள் தெரிகிறபோது, பெருமூச்சுவிடத்தான் தோன்றுகிறது.

அய்சிலாந்து—அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சுண்டைக்காய்தான், அளவில், தரத்தில், செல்வத்தில், வலிவில், எதிலும்!

ஒரு பெரிய அமெரிக்க வியாபாரக் கம்பெனியில், போடப்படும் மின்சார விளக்குகள், அய்சிலாந்து நாடு முழுவதுக்கும் போதும்!

ஒரு கம்பெனி நிர்வாகி, பெறுகிற இலாபம், அய்சிலாந்து முழுவதும் உள்ள அரசாங்க அலுவலர்கள் பெறும் ஊதியத்தைவிட அதிகமாக இருக்கும்.

அமெரிக்கா, கோபமாகப் பார்த்தால், அய்சிலாந்தால் தாங்கிக் கொள்ள முடியாது.

எனினும், அய்சிலாந்து, தன் உரிமையை இழக்க மறுக்கிறது!

தனி நாடு! தனி அரசு! தனிக் கொடி!!

கோதுமை வயலும் கோமேதகச் சுரங்கமும், எண்ணெய்க் கிணறுகளும் எழிலூர்களும், எஃகுத் தொழிற்சாலையும், விஞ்ஞானக் கல்லூரியும், அங்கு இல்லை!

பெயருக் கேற்றபடி உள்ள பனியூர் தான்!

எனினும், அகில உலக அரங்கில் அமோகமான செல்வாக்குடன் விளங்கி வரும், அமெரிக்காவைக் கண்டு, அச்சத்தால் வாயடைத்துக் கிடக்கவில்லை; அப்படிப்பட்ட அமெரிக்காவிடம், நாம் உரிமை குறித்து தகராறு வைத்துக்கொள்வதா என்று எண்ணவில்லை.

அமெரிக்க இளைஞர்கள், பொழுது போக்குக்காக, பறவை வேட்டையாடுவார்களல்லவா, அதற்குச் செலவாகும் 'வேட்டு' போதும், அய்சிலாந்து மக்களை மிரட்டி, அடக்க, ஒடுக்க!

எனினும் அயிசிலாந்து குளமாவது மேடாவது என்று பேசிவிட்டுக் குப்புறப் படுத்துக்கொள்ளவில்லை; உரிமைக் குரலை எழுப்புகிறது!

செத்து நாறிக்கிடக்கும் சிங்கத்தை விட, கொத்த வரும் சிட்டுக்குத் தானே, மதிப்பு!

அய்சிலாந்து, அமெரிக்காவைக் கேட்கிறது—எமது நாட்டின், உரிமை பறிபோகவிட முடியுமா? எதற்காக இங்கு, அமெரிக்கப்படைத்தளம் இன்னமும் இருப்பது? எமது நாட்டிலே அமெரிக்க படைத்தளம் இருப்பது, எமது தேசீயச் சுயமரியாதையைப் பாதிப்பதாக இருக்கிறது என்று கேட்கிறது.

"உண்மைதான்! உமதுஉரிமையை மறுக்கவில்லை... என்றாலும்......" என்றுதான் அமெரிக்காவால் பதிலுரைக்க முடிகிறதே தவிர, சுண்டெலிபோலிருந்துகொண்டு, எம்மை மிரட்டப் பார்க்கிறாயே! — என்று பேச முடியவில்லை.

உலகச் சூழ்நிலை, இப்போது அத்தகைய உறுமலுக்கு இடமளிப்பதாக இல்லை.

கடந்த உலகப் பெரும் போரின் போது, அமெரிக்கா, அய்சிலாந்தில், படைத்தளம் அமைத்துக்கொண்டது.

நேச நாடுகளின் சார்பில் இருந்தது அயிசிலாந்து, நாஜீசத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கையை ஆதரிக்கும் முறையில், அமெரிக்கா படைத்தளம் அமைத்துக்கொள்ள இசைவு தந்தது.

வாஷிங்டன்

அக். 4

"யுனெடெட்ஸ்டேட்சும் அய்சிலாந்தும், கீப்பாவிக் எனும் இடத்தில். அமெரிக்க துருப்புகள் தளம் வைத்துக்கொண்டிருக்கும் பிரச்சினை சம்பந்தமாக சமரச ஏற்பாடுகள் குறித்துப் பேச, நவம்பர் மாதத்தில் ரயிக்ஜாவிக் நகரில் கூடுவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

செய்தி இது! உலகப் பெரும்போரின் போது, துருப்புகள் இங்கு தளம் அமைத்துக்கொண்டிருந்தன, அனுமதித்தோம், இனியும், அமெரிக்க துருப்புகள் எமது தாயகத்தில், தளம் வைத்துக்கொண்டிருப்பது தேசீய சுயமரியாதையை அழிப்பதாக இருக்கிறது என்று அய்சிலாந்து கேட்க; அமெரிக்கா, அது குறித்து சமரசம் பேச முன்வருகிறது.

சிறிய நாடுகளை வைத்துக்கொண்டு சீரழியவா என்று பேசிடுபவர்கள், ஏதோ தலைமுறை தலைமுறையாக பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்டு பழக்கப்பட்டவர்கள் என்று எண்ணிக்கொள்கிறோம். இதோ, ஒரு சிறு நாடு—செல்வம் கொழிக்கும் இடம் அல்ல—உலக அரங்கிலே ராஜதந்திர செல்வாக்குக்கொண்டதல்ல—அந்த அய்சிலாந்து உரிமை பேசுகிறது!

ரயிக்ஜாவிக், அய்சிலாந்துக்குத் தலைநகரம். இங்கு, வல்லமை மிகுந்த அமெரிக்கா, — பனியூர்க்காரருடன், சமரசம் பேச வருகிறது.

பொன்னும் மணியும் புலமையும் பொலிவும் மிகுந்த தமிழகத்தில் பிறந்து, உரிமை அழிக்கப்படுவது கண்டும், வாய் மூடிக் கிடக்கும் ஓர் அபூர்வ ஆட்சியின்கீழ் இருந்துகொண்டு ஆயாசப்படுவதைவிட, இப்படி, உரிமை முழக்கமிடும் அளவுக்குத் திறம் படைத்த பனியூரில் பிறந்திருக்கக் கூடாதா!! — என்று எண்ணிப் பெருமூச்செறியத் தோன்றுகிறது!!

உலகப்போரின் காரணமாக, 1951ல், ஏற்பட்ட ஒப்பந்தப்படிதான், இப்போது அய்சிலாந்தில் அமெரிக்க துருப்புகள் உள்ளன.

மொத்தம் 6000 பேர் உள்ளனராம்! அய்சிலாந்தில் தனிப்பட்டாளம் கிடையாது.

சென்ற ஆண்டு, அய்சிலாந்து பார்லிமெண்டில், அமெரிக்க துருப்புகள் வெளியேற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; இதை அமுல் செய்வதற்கான முயற்சியில் அய்சிலாந்து நாட்டு வெளி விவகார அமைச்சர் எமில் ஜான்சன் என்பார் முனைந்திருக்கிறார்.

இங்கு, குளமாவது மேடாவது என்று கேட்க ஒரு முதலமைச்சர் இருக்கிறார்!!

★

# ‘தரம்’ குறைந்துவிட்டது!

— பழநி —

‘தரம்’ குறைந்துவிட்டது; மிக மிக மட்டமாகிவிட்டது; முன்பு போல் இல்லை; இப்போது நடைபெறுவதெல்லாம், இரண்டாந் தரம், மூன்றாந்தரம்—மகாமோசம்! —என்று சகல துறைகளிலும் பேசப்படுகிறது.

சங்கீதத்தின் தரம் குறைந்துவிட்டது — ‘பந்தா’ மாறிவிட்டது, ‘பாணி’ கெட்டுவிட்டது; முன்பு இருந்த அழுத்தம், அழகு, வித்வத்துவம், இப்போது கிடையாது; எல்லாம் இரண்டாந்தரம், மூன்றாந் தரம், நாலாந்தரமாகிவிட்டது; என்று சோகமாகப் பேசிவிட்டு, தரம் குறையாதிருந்த நாட்களில், இன்ன வித்வான் இவ்விதம் பாடுவார், கேட்கக் கேட்கப் பிரம்மானந்தமாக இருக்கும், அதுபோலப் பாடுவது என்பதே முடியாத காரியம் என்று தீர்மானமாகப் பேசுவர்.

சங்கீதத் துறையிலே மட்டுமல்ல, சிற்பக்கலையிலிருந்து சமையல் கலை வரையிலே இதே பேச்சுத்தான். கல்வித் துறையிலே இருந்து, காற்றாடி விளையாட்டு வரையிலே இதே பேச்சுத்தான்.

தரம் குறைந்துவிட்டது, மட்டமாகிவிட்டது, மோசமாகிவிட்டது, என்பதுதான்.

தன் மகன், அரும்பு மீசைக்காரன், ஐ. ஏ. எஸ் ஆகிவிட்டான், அதுகண்டு மகிழ்ச்சிதான், பெருமைதான், அவன் தகப்பனாருக்கு; என்றாலும் அவர் குளத்தங்கரையில் தன் நண்பரிடம் பேசும் போது கூறுகிறார், “இப்போது என்ன இருக்கிறது! எல்லாவற்றிலும் தரம் குறைந்துவிட்டது, மட்டமாகிவிட்டது; ரெவன்யூ இன்ஸ்பெக்டருக்கு அப்போது இருந்த மதிப்பினுடைய தரம், இப்போது ஐ. ஏ. எஸ். காரனுக்குக் கிடையாது, தெரியுமோ!” என்று பேசுவார்; மகன், ஐ. ஏ. எஸ்; இவர், ரெவன்யூ இன்ஸ்பெக்டர் வேலைபார்த்தவர்!

முனிசிபல் கவுன்சில், அப்போது எவ்வளவு ‘தரமாக’ இருந்தது தெரியுமா? பேட்டை முதலியார், வெள்ளிப் பூண்போட்ட தடியை டக்! டக்! என்று ஊன்றியபடி வருவார், மார்க்கட் மாமூநாகான், இரட்டைக் குதிரை சாரட்டில் வந்து இறங்குவார், கவுன்சில் கூடுகிறது என்றால், நாலுகோடி ரூபாய் கூடுகிறது என்று சொல்லலாம்; அவ்வளவு அந்தஸ்து உள்ளவர்கள் அப்போதெல்லாம் கவுன்சிலர்களாக இருப்பார்கள்; இப்போது தரம் எவ்வளவு கெட்டுவிட்டது; பெட்டிக் கடைக்காரனும் பேப்பர் வியாபாரியும், கவுன்சிலர்! தரம் குறைந்துவிட்டது—என்று, பில்கலெக்டர் வேலைபார்த்து விலகிய முதியவர் பேசுகிறார்.

தரம் கெட்டுவிட்டது—என்று நேருபண்டிதர் கூடத்தான் கூறுகிறார்—முன்பு நாங்கள் நடத்திய போராட்டம், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிங்கத்துடன்—அது எப்படிப்பட்ட போராட்டம்—இப்போது பள்ளிக்கூடத்துப் பாலகர்கள், ‘காச்சு மூச்சு’ என்று கத்திக்கொண்டு, போராட்டம் நடத்துகின்றன! எவ்வளவு தரம் குறைந்துவிட்டது தெரியுமா! சேச்சே! அப்போது, துப்பாக்கிக்கு மார்காட்டி நிற்கும் வீரமும் தூய்மையும் இருந்தது, இப்போது, தரம் குறைந்துவிட்டது—என்று, நேருபண்டிதர் அடிக்கடி பேசுகிறார்; அவர் பேசுவதற்கு முன்பு அவருடைய துரைத்தனத்தின் துப்பாக்கிபேசிவிடுகிறது!

சட்டசபைத் துறையானாலும் சத்திரம் சாவடி விஷயமானாலும் வேட்டை விஷயமானாலும் விளையாட்டுத் துறையானாலும், எதிலும் ‘தரம்’ குறைந்துவிட்டது என்றுதான் பேசப்படுகிறது.

ஆனால் இதிலே வேடிக்கை என்னவென்றால், எல்லாத் துறைகளிலும் இன்று காணப்படும் வாய்ப்புகள், பொலிவு, வலிவு, எல்லாம், முன்பு இருந்ததைவிட மிக மிக கவர்ச்சிகரமானதாகத் தெரிகிறது.

தரம் குறைந்துவிட்டது — என்பதற்குக்கூறப்படும்காரணங்களில் ஒன்று, எதுவும் எல்லோருக்கும் தெரிகிறது — எல்லோரும் எதையும் பெறுகிறார்கள் என்பதாகும்.

மற்றக் காரணங்கள் எல்லாவற்றையும்விட, இந்தக்காரணமே தரம் குறைந்துவிட்டது என்று கூறிக் குறைபடுவோரின் மனதை அதிகமாக உறுத்துகிறது.

ஒரு சிறு நகரம்—எங்கு பார்த்தாலும் ஓட்டு வீடுகள்தான் உள்ளன — ஓலைக்கொத்துக் குடிசையிலேயே வாழ்பவர்கள் அதிகம்—அப்படிப்பட்ட நகரில், ‘அக்கரை’ சென்று பணம் சேர்த்துவந்த ஒருவன், புதிய மாடி வீடு கட்டுகிறான் என்றால், நகரிலேயே அது ஒரு முக்கியமான சம்பவம், சுற்று வட்டாரத்துக்கே மாதக் கணக்கிலே அது ஒரு சுவையுள்ள பேச்சாகிறது. மாடிவீட்டுக்காரர் — என்ற சிறப்புப் பெயரே கூடக் கிடைத்துவிடுகிறது.

அதே இடத்தில், இரண்டோர் ஆண்டுகளில், வேறு சிலரும் மாடி வீடுகள் கட்டிக்கொள்கிறார்கள்—என்றால், அப்போது, தரம் குறைந்து விட்டது என்ற பேச்சு தலைதூக்க ஆரம்பிக்கும். அந்தப் பேச்சைத் துவக்கிவைப்பவர் முதல் மாடி வீட்டுக்காரராகவே இருப்பார்!

தமக்கு மட்டுமே முடியும்-தமக்கு மட்டுமே தெரியும்-தமக்கு மட்டுமே உரித்தானது—என்ற நிலை எந்தக் காரணத்தாலாவது குலைகிறது என்றால், தரம் குறைகிறது என்று பேசினால்தான், கொதிப்பேறிய உள்ளத்துக்குக் கொஞ்சம் சாந்தி கிடைக்கிறது போலும்!!

வைரம், கண்ட கண்ட பயலிடமெல்லாம் இருக்கிறது! கண்டவனெல்லாம் கவுன்சிலராகி விட்டான்!

மோட்டார் இப்போது, எவனிடம் பார்த்தாலும் இருக்கிறது!

முன்பெல்லாம் சில்க்குச் சட்டையும் சரிகைத் துப்பட்டாவும் பெரிய மனிதர்கள் மட்டுந்தான் போடுவார்கள், இப்போது யார் பார்த்தாலும், அணிந்துகொள்கிறார்கள் — தரம் கெட்டே விட்டது!

இதுபோலப் பலரும் பேசக் கேட்கிறோம்.

தமக்குச் சிறப்பு வேண்டும், தமக்கு மட்டுமே வேண்டும், பிறருக்குக் கிடைக்கவே கூடாது, என்ற எண்ணம் கொண்டவர்கள், மற்றப் பலரும், தம்மைப்போலவே, திறம் சிறப்பு, வசதி வாய்ப்பு, வலிவு பொலிவு, பெறுகிறார்கள் என்பதைக் கண்டால் அருவருப்பு அடைவதுடன், உலகம் கெட்டு விட்டது, தரம் கெட்டுவிட்டது என்று "மூக்கால்" அழுவார்கள்.

எந்தத் துறையிலும், அவ்வப்போது அமைந்துள்ள சூழ்நிலைக்கு ஏற்றபடி ஒரு முறை அமைகிறது—அதைத்தான் 'தரம்'—'தரம்' என்கிறோம்.

கால நிலைக்கு ஏற்ப, புதிய புதிய 'தரம்' அமைகிறது. புதியதாக அமைவது எல்லாம், பழையனவற்றுக்குத் தரத்திலே மட்டமானதுதான் என்று வாதாடுவது, தவறாகும்.

கோட்டை கொத்தளங்களும், மாடங்கள் கூடங்களும், அரண்மனை மாளிகைகளும், கட்டிய போது இருந்த உலகு வேறு; இப்போதுள்ள உலகு வேறு.

இப்போது, அப்போதுபோல கோட்டை கொத்தளம் 'தரமாகக்' கட்டமுடியுமா என்றபிரச்சினைக்கே இடமில்லை; காரணம், இப்போது அவ்விதமான கோட்டை கொத்தள அமைப்புகளுக்கே அவசியமில்லாமற் போய்விட்டது. இதை உணர மறுப்போர், இந்தக் காலத்தில் கட்டிட வேலைப்பாட்டின் தரம் மிகமட்டமாகி விட்டது, அந்தக் காலத்துக் கோபுரத்தைப் பார், நீராழி மண்டபத்தைப் பார், மதிற் சுவரைப் பார், மாடமாளிகையைப் பார், என்று பேசுகின்றனர்.

'தரம்' குறைந்துவிட்டது என்று பேசுவதன் மூலம், தமது திறம், வேறு பலருக்கும் கிட்டிவிட்டது என்பதை மறைத்துக்கொண்டு, மனச் சாந்தி பெறவும், வேறு பலரும் திறம் பெற்றிருக்கிறார்கள் என்று பலரால் பாராட்டப்படுவது கண்டு கிளம்பும் மன எரிச்சலை அடக்கிக்கொள்ளவும் முயற்சிக்கிறார்கள் என்பதன்றி வேறில்லை.

இனி, நேரு பண்டிதரின் கூற்றினையே மீண்டும் பார்ப்போம்.

கிளர்ச்சிக்காரர்கள்-ஆர்வமுள்ள இளைஞர்கள் — இலட்சிய முழக்கமிடும் மாணவர்கள் — இப்போது ஈடுபட்டுள்ள செயலும், மேற்கொண்டுள்ள நடவடிக்கையும், தரத்தில் குறைந்தவை, என்று பண்டிதர் கண்டிக்கிறார்.

வந்தேமாதரம் — இங்குலாப் ஜிந்தாபாத்—பாரத்மாதாகீ ஜே—என்றமுழக்கத்துடன்நடத்தப்பட்ட கிளர்ச்சிகளுக்கும், சம்யுக்த மகாராஷ்டிரம்வேண்டும்! மகா குஜராத் ஜிந்தாபாத்! தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கே! வடக்கெல்லையைவிட மாட்டோம்!—என்பன போன்ற இலட்சிய முழக்கங்களுடன் நடத்தப்பட்டு வரும் கிளர்ச்சிகளுக்கும், தரத்தில் என்ன மாறுபாடு காட்ட முடியும்! முன்னையது பண்டிதருக்குப் பிரியமானது, பிந்தியது அவருக்குப் பிடித்தமானது அல்ல என்பதும், முன்னையது அவரை முடிசூடா மன்னராக்க உதவியது, பின்னையது அவருடைய சர்வாதிகாரத்தை எதிர்ப்பது என்பதும் தவிர, தரத்தில் என்ன வித்தியாசம் காட்டமுடியும்! ஆனால் இந்தக் கிளர்ச்சிகளெல்லாம் தரத்தில் மட்டமானவை; இரண்டாந்தரம், நாலாந்தரம், என்று பண்டிதர் கண்டிக்கிறார்.

நேரு பண்டிதர் மட்டுந்தான் இந்தப் போக்குடன் இருக்கிறார், என்றால், இல்லை. பலரிடம் இந்தப் போக்கு, சர்வசாதாரணமாக எழுகிறது.

ம. பொ. சி. எல்லைக் கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்; இது என்ன கிளர்ச்சி, இது என்ன போராட்டம், மூன்றாந்தர மக்கள் நடத்தும் போராட்டம், மூன்றாந்தரமான கிளர்ச்சி, என்று கூறுகிறார் பெரியார்.

ஒரு திருப்பதி, ஒரு திருத்தணி, ஒரு சித்தூர் — இவைகளுக்காக மூச்சுப்பிடித்துக்கொண்டுசண்டை போடுவதும், நல்லதோர் ஆட்சிக்குத் தொல்லைதருவதும் சரியாகுமா என்று கேட்கிறார். தரம் கெட்டு விட்டது! கண்ட கண்ட காரியத்துக்கெல்லாம், யாராரோ, கிளர்ச்சி, போர், என்று குதித்தெழுகிறார்கள்—தரம் கெட்டே விட்டது என்று கூறி வருந்துகிறார்.

சென்னை எமதே என்று ஆந்திரர் கிளம்பினர்; தமிழர் திரண்டெழுந்தனர்; பெரியார், ஆந்திரரின் பேராசையை அழித்தொழித்தே ஆகவேண்டும், சென்னையில் இரத்த ஆறு ஓடும், பிணங்கள் விழும், பெரும் புரட்சி மூளும்—என்று பரணி பாடினார்.

கல்கத்தாவிலும் கராச்சியிலும், காட்மாண்டுவிலும் தெகரானிலும், இது, தரக்குறைவான தகராறு என்று எண்ணிக்கொண்டிருந்திருப்பர்! அதற்காக வேண்டி, பெரியார் சென்னை ஆந்திரர் கரத்தில் சிக்கக்கூடாது என்று போரார்வம் காட்டாதிருக்க முடியுமா? போரார்வம் காட்டினார். ஆனால், இப்போது, ம. பொ. சி. அதே போரார்வத்தை, வடக்கெல்லை விஷயமாகக் காட்டும் போது, இந்தக் கிளர்ச்சி தரக் குறைவானது — மூன்றாந்தரம் — என்று அலட்சியம் பேசுகிறார்.

சித்தூர்—திருத்தணி — திருப்பதி—இவைகளுக்காக ம. பொ. சி.

நடத்தும் கிளர்ச்சி பெரியாருக்கு, தரக்குறைவு என்று படுகிறது; பம்பாய்க்காக மராட்டியர் நடத்தும் கிளர்ச்சியும், மகாகுஜராத்துக்காக குஜராத்தியர் நடத்தும் கிளர்ச்சியும், தரக்குறைவு என்று நேருபண்டிதர் கருதுகிறார்! இப்படியே ஒருவர் நடத்துவதை மற்றவர் தரக்குறைவு என்று கேவலப்படுத்திக் கொண்டே போனால், எங்கு கொண்டுபோய்ச் சேர்க்கும். ஆஸ்ரமத்தில் உள்ளவர், அரசியல் சம்பந்தமாக, அகில உலகில் நடைபெறும் எந்தக் கிளர்ச்சியும் தரக்குறைவானது என்று கூறுவர், கேலிப் புன்னகையுடன் அவர்கள் கூறக்கூடும், இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை; இந்த இலட்சணத்தில், சூயஸ் எனக்கா உனக்கா என்று ஒரு சண்டை! பார்மோசா, உன்வசமா என்வசமா? என்பதற்கு ஒரு அமளி, காஷ்மீரம் யாருக்குச் சொந்தம் என்பதற்கு ஒரு வழக்கு! செச்சே! மாந்தர் ஏன் இப்படி, மட்டமான, மாயமான, பிரச்சினைகளிலே மனதைப் பறிகொடுத்துப் பாழாகிறார்கள். எங்கிருந்து வந்தாய்? எங்கே செல்கிறாய்? ஏன் பிறந்தாய்? ஏன் மரிக்கிறாய்?—என்ற அடிப்படைப் பிரச்சினைக்கு விளக்கம் தேடாமல், விவேகம் நாடாமல், கேவலம், மாயப்பிரபஞ்ச விவகாரத்துக்காக மண்டையை உடைத்துக்கொள்கிறார்களே! மகாகேவலம்! மகா பாபம்!—என்று சோகிக்கக்கூடும்.

ஆஸ்ரமவாசிக்கு இப்போது நாசரும் கிருஷ்ணமேனனும் சந்திப்பதும், சுகர்ணோவும் மாசேதுங்கும் தோழமை கொள்வதும், டிட்டோவும் குருஷேவும் கூடிப்பேசுவதும்—எல்லாம் தரக்குறைவான செயலாகத்தான் தென்படும்!

பிரச்சினை நியாயமானதுதான், கிளர்ச்சிகூடச் செய்யப்படவேண்டியதுதான், ஆனால் அந்தக் கிளர்ச்சியை நடத்துபவர்கள், ஏதோ உள் நோக்கம்கொண்டு நடத்துபவர்களாய், தரம் குறைந்த ஆட்களாய் இருப்பதால், கிளர்ச்சிகளுக்கு உள்ள மதிப்பே பாழாகிவிட்டது என்று பெரியார் பேசுகிறார்.

வைரம்—கண்டகண்ட பயலிடம் இருக்கிறது—என்று கூறும்போக்கு இது.

தரம்குறைந்த ஆட்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுவிடுகிறார்கள் என்ற எண்ணம் கொண்டாலும் — அது சரியாக இருக்கட்டும், தவறாக இருக்கட்டும்—அதற்குப் பரிகாரம் என்ன? தரம் உள்ளவர்கள் கிளர்ச்சிகளை நடத்துவதுதானே தக்க பரிகாரம்!

பொல்லாச் சிறகு விரித்தாடும் வான் கோழி என்றுகூறிக் கேலி செய்வதுடன் இருந்துவிட்டால் போதுமா? கானமயிலாடக் கண்டிருந்ததாலேயே ஒரு சமயம், வான்கோழி தன் பொல்லாச் சிறகு விரித்தாடியிருக்கக்கூடும்! ஆனால், அதைக் கண்டு, வான்கோழி பொல்லாச் சிறகு விரித்தாடும் காரணத்தால், நான் தோகை விரித்து ஆடமாட்டேன் என்று மயில் கூறலாமா! மயில் தன் புள்ளிக்கலாபம் விரித்தாடிக் காட்டினால், காண்போர் — ஆஹா! இஃதன்றோ ஆடல் என்று கூறி மகிழ்வர்.

அதுபோல, தரம் கெட்டுவிட்டது என்று மட்டும் கூறிவிடுவது போதாது, தரம் குறையாத முறையில் செயல்படக் கூடியவர்கள், செயல்பட வேண்டும்.

தாம், செயல்படாமலிருப்பதற்குக் காரணமே, தரம் குறைந்தவர்கள் செயல் பட்டுவிட்டதுதான்—என்று பேசுவதில், மனக்குறையும் குமுறலும் மட்டுமே தெரிகிறது!

வைரம் கண்ட பயலிடம் இருக்கிறது—தரம் மட்டமாகிவிட்டது—என்று கூறிவிட்டு, இதோ வைரத்தைவிட விலையுயர்ந்த நவமணி, என்று எதையேனும் அணிந்து காட்டினால், பொருள் உண்டு.

அப்படிக்கின்றி, கண்ட பயல் வைரம் அணிகிறான் என்பதாலே, வைரத்தின் தரம் கெட்டுவிட்டதாலே நான் வைரம் அணிவதை விட்டுவிட்டேன் — என்று கூறுவதுடன், அதனாலேயே, வைரத்தை மார்வாடி கடையில் ஈடுவைத்துக் கடன் வாங்கினேன்!—என்று கூறினால், சிரிப்பு வருகிறதல்லவா!!

★

# அந்தோ பஞ்சசீலமே!

கல்வி கற்றுப் பதவி வகிக்கும் தகுதி பெறும் நிலையிலுள்ள இளைஞர்கள், பதவி நியமனக் குழுவினர் "பஞ்சசீலம என்றால் என்ன என்று கேட்டதற்கு அளித்துள்ள பதில், உண்மையிலேயே பஞ்சசீலம் அறியாததால் அளிக்கப்பட்ட பதிலா அல்லது பஞ்சசீலத்தைக் கிண்டல் பண்ணும் முறையில் அளிக்கப்பட்ட பதிலா என்பது சிந்தித்துப்பார்க்க வேண்டியதாகும்—இதோ அந்தப் பதில்கள்:-

1. சீனக் குடியரசுத் தலைவருக்கு நேரு வழங்கியுள்ளபட்டமே பஞ்சசீலம் என்பது இப்படி ஒரு அருமையான பதில்!
2. பஞ்சசிலம் என்பது வேறொன்றுமில்லை. காண்பதற்கு அழகிய ஐந்து பெரும் குன்றுகளே பஞ்சசீலம். இது இன்னொரு விடை!
3. இந்தியாவிலுள்ள ஒரு நாடு பஞ்சசீலம் என்பது; அந்த நாட்டில் பண்டைப் புகழ் மிக்க கோயில்கள் நிறைந்துள்ளன. இது ஒரு மாணவர் அளித்துள்ள விளக்கம்!
4. பஞ்சசீலம் என்பது ஐந்து பெரும் கோயில்களின் பெயர். மற்றொரு அழகான பதில். ஐந்தாவது பதில் எல்லாவற்றையும் மிஞ்சிவிடக் கூடியது. புராண அடிப்படையிலே பதில் கூறிவிட்டார் அம்மாணவர். கானகத்தில் பஞ்ச பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்த போது அவர்கள் தங்கி இருந்த இடத்தின் பெயர் பஞ்சசீலம்!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

குமாரசாமிராஜா, சின்னாட்களுக்கெல்லாம், மென்று விழுங்கினார், நான் சொன்னதை மிகைப்படுத்தி விட்டார்கள் என்று மழுப்பினார், நானென்றும் வடநாடு தென்னாடு என்று பேதம் பேசுபவனல்ல என்றார், அப்படிப் பேசுபவர்கள் மீது பாய்ந்து தாக்குவேன் என்றார்! கடைசியில், நம்மீதுதான் அவர் தமது கோபத்தைத் திருப்ப முடிந்ததே யொழிய, கோவைப் பேச்சைத் தொடர்ந்து செல்லமுடியவில்லை!!

நிதி அமைச்சர் சுப்பிரமணியனார், சில வேளைகளில், இதேபோல ஓசை எழுப்பி மகிழ்கிறார்.

தொழில் வளம் தென்னாட்டில் போதுமானதாக இல்லை; புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; நமக்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவு—என்றெல்லாம் அவரும், 'இடம் பொருள் ஏவல்' கவனித்து, வீரத்தை, விவேகத்தை அள்ளி வீசுகிறார்! வீசிவிட்டுச் சுற்று முற்றும் பார்க்கிறார்!! டில்லி, சவுக்கு எடுக்கும் என்று தெரிந்தால், கிலி பிடிக்கிறது, உடனே, 'என்றாலும்' என்ற பதத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, வடநாடு தென்னாடு என்று பேசுவது மடைத்தனம், போக்கிரித்தனம், பைத்யக்காரத்தனம், தேசத்துரோகம், என்று சுடுசொல் வீசுகிறார், நம்மீது. இதென்ன பைத்யக்காரத்தனமாக, புத்தி கெட்டதனமாக, துடுக்குத்தனமாக, சுப்பிரமணியம் வடநாடு தென்னாடு என்ற பேதம் தொனிக்கும்படி பேசினாராமே, என்று டில்லி கேட்க, அதுகேட்டு ஏற்பட்ட அச்சத்தால் அமைச்சர் தாக்கப்பட்டு, "தாசனய்யா நான்! தர்ம துரைகளே! என்னைத் தவறாக நினைத்துக் கொள்ள வேண்டாம்! இதோ எண்ணிக்கொள்ளுங்கள் 'தோப்புக்கரணம்' போடுகிறேன்—என்று டில்லியை நோக்கிக் கூறுவதாகத்தான் நமக்கு அவர் பேச்சுப் படுகிறது—நம்மை நிந்திப்பதாகக்கூடத்தெரியவில்லை.

நேர்மையில்லை, எனவே நெஞ்சிலே உறுதி இல்லை!

பற்றற்ற தன்மை இல்லை; எனவே பயமற்றபோக்குக்கொள்ள முடியவில்லை.

தெளிவும் இல்லை, துணிவும் எழவில்லை; தோத்தரித்துத் துதிபாடினால் துரைத்தனத்தில் பங்கு கிடைக்கிறதே, இதனை இழந்து விடுவதா என்ற எண்ணம் குடைகிறது, வடநாடாவது தென்னாடாவது, பதவி, பதவி, பதவி! அது போதும்! அது இனிக்கிறது! சுவைப்போம், கிடைக்குமட்டும்!! என்ற திருப்தி ஏற்பட்டு விடுகிறது; பதவியில் பதுங்கிக்கொள்கிறார்கள்.

இவர்களை எல்லாம் கூட விட்டுவிடு, தம்பி, விவேகத்தில் இவர் வசிஷ்டர், வைராக்யத்தில் விசுவாமித்திரர், தந்திரத்தில் சாணக்கியர், தத்துவார்த்த விவாதத்தில் குல்லூகபட்டர், என்றெல்லாம் புகழ்கிறார்கள் இராஜகோபாலாச்சாரியாரை! அவர் போக்கு என்ன?

இந்தி மொழி மீது அவர் போர் தொடுத்திருக்கிறார்! பேச்சளவில்!

ஆங்கிலத்தைக் கை விடுவது முட்டாள்தனம் என்று பேசுகிறார்.

இது குறித்து அவர் தம் கருத்துகளைத் தெரிவிக்கும்போது முறுக்கும் மிடுக்கும் களிநடனம் புரிகின்றன! எதற்கும் அஞ்சேன்! எவருக்கும் தலைவணங்கேன்! என்று கூறிடும் கெம்பீரம் காண்கிறோம்.

ஆச்சாரியார், இந்தியைப் புகுத்தும் டில்லியின் போக்கைக் கண்டிக்கும் போக்கிலே, நூற்றிலே ஒரு பாகம், நாம் பேசினால், காங்கிரஸ் நண்பர்களுக்குக் கண்கள் சிவந்துவிடும், மீசை துடிக்கும், கோபம் வெடிக்கும். அவர் 'அநாயாசமாக' வடநாட்டுப் போக்கைக் கண்டித்துப் பேசுகிறார், எழுதுகிறார்.

**இதென்ன பைத்யக்காரப் போக்கு!**

**இந்த அநீதையை நான் அநுமதியேன்;**

**சர்வாதிகார வெறி கூடாது.**

**மனம் பதறுகிறது— மானமும் போகிறது.**

என்றெல்லாம், 'காரசாரமாக'ப் பேசுகிறார். அறிக்கைமேல் அறிக்கை விடுகிறார்!

**பெரியார்**

**பீ. டி. ராஜன்**

**ராஜா சர்**

**ம. பொ. சி.**

**சேதுப்பிள்ளை**

**டாக்டர் மு. வ.**

**இராமசாமி சாஸ்திரியார்**

**கிருஷ்ணசாமி ஐயர்**

**வடபாதிமங்கலம்**

**திருச்சி விசுவநாதன்**

**நாவலர் நெடுஞ்செழியன்**

போன்ற தலைவர்களை எல்லாம், தமிழ் வளர்ச்சியில் பேரார்வம் காட்டும் அன்பர் சுப்பையர் அவர்களின் 'தமிழகம்' எனும் இல்லத்தில் கூட்டிவைத்துப் பேசி, அனைவரிடமும், 'இந்தியை அரசாங்க பாஷை' ஆக்கும் போக்கைக் கைவிட்டு விடவேண்டும், ஆங்கிலம் இருந்துவர வேண்டும், மாகாணத்துக்கு மாகாணம் தொடர்பு வைத்துக்கொள்ளவும், மாகாணத்துக்கும் மத்திய சர்க்காருக்கும் தொடர்பு வைத்துக்கொள்ளவும் ஆங்கிலம்தான் தகுதியானது, வசதியானது, என்ற அறிக்கையில் கையொப்பமிடச் செய்தார். நானும் உடனிருந்தேன்.

இவ்வளவு செய்தவர் யார்? கட்டாய இந்தியை முதல் அமைச்சராக இருந்த போது புகுத்திய ஆச்சாரியார்!!

கட்டாய இந்தியைப் புகுத்தி, அதை எதிர்த்ததற்காகப் பெரியாரை பெல்லாரிச் சிறையில் வாட்டியவரும் அவரே!

இந்தியைப் புகுத்தி தமிழரை நாசமாக்காதீர்கள், ஆங்கிலமே இருக்கட்டும், என்ற தம்முடைய திட்டத்துக்குப் பெரியாருடைய கையொப்பத்தை வாங்கியவரும் அவரேதான்!!

ஆச்சாரியார் எப்படிப்பட்ட குணத்தவர் என்பதற்காக இதைக் கூறவில்லை.

கட்டாய இந்தியைப் புகுத்தி, பெரியாரையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்களையும், சிறையில் போட்டு வாட்டி வதைத்து, தாலமுத்து நடராசன் எனும் இரு இளைஞர்களின் உயிரையும் குடித்து, கையில் கிடைத்ததைக்

கொண்டு அடிப்பேன்! என்று கொக்கரித்துக் கோலோச்சிய ஆச்சாரியார், எங்களை எல்லாம் அழைத்து, அனைவரும் கூடி ஆங்கிலம் கேட்போம் வாரீர் என்று பேசினாரே, இது எத்தகைய விந்தை, எங்களுக்கு எத்துணை பெரிய வெற்றி, என்பது பற்றிப் பேசிட அல்ல, இதனைக்கூறுவது.

இந்தி ஆதிக்கம் புகுத்தப்பட்ட போது, எதிர்த்திட இவர் முன்வரவில்லை; மனம் இல்லை; மாறாக இவரே அந்த ஆதிக்கத்தைப் புகுத்த முனைந்து நின்றார்; எதிர்த்தோரை அடக்குமுறை கொண்டு தாக்கினார்.

காலங்கடந்து கருத்து மலர்ந்தாலென்ன, கருத்து மலர்ந்தது என்பதிலே மகிழத்தானே வேண்டும், என்று கேட்பாய், தம்பி, நான் அவர் ஏன் அப்போது அப்படிச் செய்தார், இப்போது ஏன் இவ்விதம் செய்கிறார் என்று கேட்கவில்லை; நான் சொல்வது, இப்போதும் அவர், செய்யவேண்டியதை செய்யவேண்டிய முறைப்படி செய்யவில்லை என்கிறேன்!

**இப்போதும் அவர், காங்கிரஸ் மேலிடத்தில், இதுபற்றி வாதாட, போராட, காங்கிரஸ் இதற்கு இணங்க மறுத்தால், மக்களைத் திரட்டி, அந்தப் போக்கை எதிர்த்திட முன்வரவில்லை!**

**அதனால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைத் தாங்கிக்கொள்ளும் துணிவு பெற மறுக்கிறார்!**

அன்று அனைவரையும் கூட்டி வைத்து, அருமையாக விளக்கமளித்தார்!

விளக்கத்தில், அருமைப்பாடு இருந்தது, ஆனால் அதற்குத் தேவை இருந்ததா என்றால்; இல்லை என்பதை, அங்கு கூடியிருந்தோரின் பெயர்ப்பட்டியலைப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம்.

இந்த நாட்டை ஆள்வது யார்' இராமசாமிப் பெரியாரா, நானா?— என்று ஆச்சாரியார் ஆத்திரத்துடன் கேட்கவேண்டிய அளவுக்கு வீரமான அறப்போர் நடத்திய பெரியாருக்கு, ஆச்சாரியார் இந்தியால் விளையும் கேடுபற்றி விளக்கவேண்டிய அவசியம், என்ன வந்தது?

தமிழ் மொழியின் தொன்மை பற்றி டாக்டர் மு. வ. வுக்கும், பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கும் இவர் எடுத்துச்சொல்வதா!

ஏதோ, அவர் விளக்கம் அளித்தார் — கேட்டுக்கொண்டோம், இந்த நிலைக்கு அவர் வந்து சேர்ந்தாரே என்ற மகிழ்ச்சியுடன்.

அதற்குப் பிறகு; அவர் செய்தது என்ன?

கட்டுரை எழுதுகிறார்—அழகான கட்டுரைதான் —ஆணித்திறமான வாதங்கள் காண்கிறோம் — இது மேதாவித்தனம்; இல்லை என்பார் இல்லை! ஆனால் இது போதாதே!

நயாபைசா அல்லவா நடமாடுகிறது!!

ஆச்சாரியார், இந்தப் போக்கைக் கைவிட்டாகவேண்டும் என்று நேரு பெருமகனாருக்கு, இறுதி எச்சரிக்கை ஏன்விடக் கூடாது? ஏன் தமது ஒப்பற்ற நண்பர் பெரியாரிடம் கலந்துபேசி, இந்தி ஆதிக்க ஒழிப்புக்கான அறப்போர் தீட்டி நடத்தக் கூடாது? செய்கிறாரா? இல்லை! செய்வாரா? அவரா! கனவிலே கூட அப்படி ஒரு காட்சியைக் காணமுடியாது.

ஆனால், பேசுகிறார், எழுதுகிறார், இந்தி ஆதிக்கம் ஆபத்தானது, அக்ரமம், அநீதி என்று! அந்தப் போக்கை எதிர்த்து ஒழித்தாக வேண்டும் என்று எக்காளமிடுகிறார், ஆனால் எதிர்ப்பு நடத்த மறுக்கிறார்.

அனுமந்தய்யாவும், சுப்ரமணியனும், குமாரசாமி ராஜாவும் வேறு பலரும், எப்படியோ, அப்படியே தான் ஆச்சாரியாரும் இருக்கிறார். இவர்கள் யாவரும் வடநாடு, மெள்ள மெள்ள தன் ஆதிக்கப் பிடியைப் பலப்படுத்திக்கொண்டு வருவதை உணருகிறார்கள், ஓரோர் சமயம் வெளியிலே கொட்டியும் காட்டுகிறார்கள், ஆனால், துணிந்தும் தொடர்ந்தும் பணியாற்றி, வடநாட்டு ஆதிக்கத்தை ஒழித்திடும் விடுதலைப் போர் நடத்த அஞ்சுகிறார்கள், அந்த அச்சத்துடன், காங்கிரஸ் மேலிடத்தைப் பகைத்துக்கொள்ளாமலிருந்தால், பசையும் ருசியும் இருக்கிறது என்பதைச் சொந்த அனுபவ மூலம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள், எனவே ஆசையும் அவர்களை ஆட்டிப்படைக்கிறது.

எனவேதான், தம்பி, ஆசைக்கும் அச்சத்துக்கும் ஆட்படவேண்டிய நிலையில் இல்லாத நாம், துணிந்து, தூய உள்ளத்துடன் நமது வசதிக்கும், நமக்கு மக்கள் அளித்திடும் வாய்ப்புக்கும் ஏற்ற முறையில், தாயகத்தின் தன்மானம் காத்திடும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். நாம், தகுதியற்றவர்கள், என்று கூறுவாருளர், அந்தச் சுடுசொல், நமக்குக்கோபமூட்டக்கூட இல்லை—அந்தக் கட்டத்தையும் நாம் கடந்துவிட்டோம் — மேலும் தகுதிபெறவேண்டும் என்ற ஆர்வத்தை நமக்குள் தூண்டிவிடவே, அந்தத் தூற்றலெல்லாம் பயன்பட்டுவருகிறது.

பெரும் பெரும் தலைவர்கள், துணிவுபெறாமல் தடுமாறிடக் காண்கிறோம், டில்லியை எதிர்த்து நிற்க முடியாது என்று எண்ணி மருண்டிடக் காண்கிறோம்; கண்ட பிறகும், நாம் நமது பணியினைக் கலங்காது செய்து வருகிறோம்.

அவர்களின் தடுமாற்றத்துக்கு உள்ள காரணம் புரிகிறது. நாம் மேற்கொண்டுள்ள பணியின் தூய்மையும், தெரிகிறது.

நாம், அவ்வளவு பெரிய பணிக்கு ஏற்றவர்கள்தானா என்ற ஐயப்பாடுகூட எழக்கூடும்—விடுதலைப் போர் சாமான்யமானதல்ல.

என்றாலும், நம்பிக்கையுடன் பணியாற்றுகிறோம், மேதைகள் மருண்டோடுகிறார்கள், நாமாவது, இந்த நற்காரியத்துக்கு நம்மை ஒப்படைத்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் பணியாற்றி வருகிறோம்.

அந்தப் பணியிலே ஒரு சிறு பகுதி — சுவையும் சூடும் மிகுந்த பகுதி—தேர்தல்.

ஆய்வுக் குழுவினர், தமிழகமெங்கும் சென்று, தோழர்களைக் கண்டு பேசிவிட்டு வருகின்றனர்—அவர்களிடம், நான் கேட்டுப் பெறும் கருத்துரைகளை தம்பி, உன்னிடம் கூறிமகிழ்ந்திட உள்ளம் துடிக்கிறது—இப்போது உறக்கம் மேலிடுகிறது, மணி விடியற்காலை நாலு.

அன்பன்,


அண்ணாதுரை

# உலையில் தங்கம்

**6**

**நான்** எதிர்பார்க்கவேஇல்லை அம்மாவும் அப்பாவும் ஒரு நாள் திடீரென வந்தனர். முன்பு ஒருமுறை அவர்களுக்குச்சொல்லியனுப்பிவரச் செய்யலாமா என நான் எண்ணியது உண்டு. துன்பத்தின் தொடக்கத்தில் அதைப் பொறுத்துக் கொள்ளும் மன உறுதி இல்லாத போது அப்படி எண்ணினேன். ஆனால் நாளடைவில் ஓரகத்தியின் வன்நெஞ்சமும் கணவருடைய புறக்கணிப்பும் ஓரளவுக்கு எனக்குப் பழக்கமாகி விட்டன. இனி ''என்ன செய்வது?'' என்று மனந் தேறிவிட்டிருக்கின்றேன். பழக்கம் அந்த அளவிற்கு என் மனதை மரத்துப்போகச் செய்தது.

நெருங்கிப் பழகியவர் யாராவது இறந்துவிட்டால் முதலில் இருக்கும் துக்கம் நாளாக நாளாக இருப்பதில்லை. இறந்த அண்மையில் இறந்தவருடைய தொடர்புடைய எந்தப் பொருளைக் கண்டாலும்—அது எத்துணை எளியது ஆயினும் — நினைவு நெஞ்சுக் குழியினின்றும் பீறிட்டு வெளிப்பட, வாய் புலம்பத் தொடங்குகின்றது; கண்ணீர் வெள்ளமாகிறது. நாளடைவில் அந்த நிலை மெல்ல மெல்ல மாறி இறுதியில் இறந்தவரைப் பற்றியும் இறந்த வகையைப் பற்றியும் வருவோர்க்கும் கேட்போர்க்கும் அமைதியாக எடுத்துச் சொல்ல இயலுகின்றது. மிகுதியாக அன்பைப் பெருக்கி நெருங்கிப் பழகியவர்கள் மட்டுமே நெடு நாள் பொறுத்தும் எப்போதோ ஒருமுறை அந்த நினைப்பு வந்ததும் நிலை கலங்கிவிடுகின்றனர்.



என் நிலையும் அப்படித்தான் ஆயிற்று. முதலில் ஓரகத்தியையும் கணவரையும்காணும் போதெல்லாம் துக்கம் குமுறி எழப்பெரிய மனப் போராட்டத்தில் ஈடுபட்டு மயங்கிக்கிடப்பேன். அப்போது, என் இள உள்ளம் பலமுறை எண்ணியதுண்டு, தாய் வீட்டுக்குப் போய்விடலாமா என்று. ஆனால் இப்போது என் நிலையே வேறு; இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்து பழகிவிட்டதால் அதைப் பற்றிச் சிந்தனையின்றி இருக்கின்றேன். எனவேதான் அப்பாவும் அம்மாவும் வரக் கண்டதும் ஓடிச் சென்று அவர்களை வரவேற்பதையும் மறந்து ஒரு கணம் மலைத்து நின்று விட்டேன்.

அது ஒரு கணம்தான்.

அப்பா கைகால் கழுவிக்கொண்டு கூடத்து ஊஞ்சலில் சென்றமர்ந்தார். அவருக்கு மோர் கொடுத்தேன். ''நலந்தானே அம்மா?'' ''எங்கே மற்றவர்கள்?'' என்றார். ''வெளியே போய் இருக்கிறார்கள். வந்துவிடுவார்கள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே தோட்டத்துப்பக்கம் போயிருந்த ஓரகத்தி வந்தாள். வந்தவள் அப்பாவைக் கண்டதும் சற்றுத் திகைத்தாள் என்றாலும், கடமைக்காக ''எப்போது வந்தீர்கள்?'' எனக் கேட்டுவிட்டு விடையையும் எதிர்பார்க்காதவள்போல் தெருப்பக்கம் போய் விட்டாள்.

**பா. கி. தசரதன்**

சமையலறைப்பக்கம் போனேன், அம்மாவைக்காண. கொண்டுவந்திருந்த பைகளினின்றும் எனக்குப் பிடித்த ஒட்டுமாம்பழங்களை எடுத்து ஒரு கூடையில் வைத்து அடுக்கிக் கொண்டிருந்தாள்.

''ஏனம்மா இவ்வளவு?'' என்றேன்.

''என்னமோ செங்கல்பட்டுக்கடைத் தெருவில் பார்த்தேன். வாங்கிவிட்டேன்'' என்றாள்.

என்ன காரியமாக வந்திருப்பார்கள் என்று நான்குழம்பிக்கொண்டிருக்கும் போதே, ''தலைமுழுகி நான்கு மாதமாகின்றதாமே. மெய்தானா?'' என்று வாயெல்லாம் பல்லாகக் கேட்டாள் அம்மா.

நான் தலைமுழுகவில்லை என்பதில் அந்தப் பெற்ற வயிற்றுக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி. பெண்கள் தங்கள் வயது ஏறிக்கொண்டே போவதைப்பற்றிக் கவலைப்படுவார்கள் என்று சொல்வது உண்டு. பட்டணங்களிலும் மேற்கு நாடுகளிலும் பெண்கள் வயதையே வெளியில் சொல்ல மாட்டார்களாம், ஆனால் இந்த ஒரு வகையில் மட்டும் அவர்கள் போலி உறுதி நிலைக்காதுபோல் தோன்றுகின்றது. அவர்கள் அவர்கள் என்று வேறுபடுத்திப் பேசுவானேன். நானே போதுமே. ஓரகத்தியின் கொடுமையையும் கணவரின் புறக்கணிப்பையும் தாங்கிக்கொண்டு இன்னும் தற்கொலையைப் பற்றி எண்ணாமலே இருக்கிறேன் என்றால் அதற்கு என் வயிற்றில் இருக்கும் சின்ன உயிர்தானே காரணம்?

பெண்ணாக இருந்த நான் தாயாகப் போகிறேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. தாயாக இருந்த அம்மா பாட்டியாகப் போகிறாள் என்பதில் அவளுக்கு மகிழ்ச்சி.

''ஆமாம் அம்மா'' என்று எழுத்தெழுத்தாகச் சொல்லுவதற்குள் நாணம் என்னைக் கப்பிக்கொண்டது.

நான் தலைமுழுகாமல் இருப்பது இவர்களுக்கு எவ்வாறு தெரிந்தது என்று ஐயப்பட்டுக்கொண்டிருக்கும் போதே,

''அந்தச் செங்கமலக் கிழவி ஒரு நாள் நம் ஊர் வழியாக பஸ்ஸில் போய்க்கொண்டு இருந்தாளாம். நம் ஊரில் கொஞ்சநேரம் பஸ் நின்ற போது வெளியில் எட்டிப்பார்த்தவள் உன் அப்பாவைக் கண்டாளாம். அவள் யார் என்று இவருக்கு அடையாளம் புரியாது திகைத்துக்கொண்டிருக்கும் போதே 'தங்கத்திற்கு' மாதமாகிக்



கொண்டிருக்கிறதே போய் வருவதுதானே என்று சொன்னுளாம். மேலே விவரம் கேட்பதற்குமுன் பஸ் அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டதாம்'' என்ருள்.

ஓரகத்தி சமையல் அறையினுள் தலைநீட்டிப்பார்த்து ''நான்பார்க்கவே இல்லையே. எப்போது வந்தீர்கள்? நலம்தானே?'' எனக் கேட்டுவிட்டு முன்போல் வெளிப்பக்கம் போய் விட்டாள்.

பகல் உணவு முடித்துக்கொண்டதும் அப்பாவும் அம்மாவும் உறங்கி விட்டனர். கணவரும் அவருடைய அண்ணனும் அவர்களிடம் ஒப்புக்கு ஏதோ சில சொற்களை பேசினர்.

பச்சையம்மாவின் தம்பி அன்றும் வந்தான். ஓரகத்தி அவனுடன் மிக்க மகிழ்ச்சியுடன் பேசத் தொடங்கி விட்டாள். நேற்ருவது அவள் கணவர் இடையே வந்துபோனுர். என் கணவர் உடன் இருந்தார். பேச்சு அடிக்கடி தடைப்பட்டது. இன்று எந்தத் தடையும் இல்லை. மணிக்கணக்கில் அவர்கள் பேச்சு வளர்ந்தது. அடிக்கடி சிரிக்கும் ஒலிமட்டும் பேரொலியாகக் கேட்ட வண்ணம் இருந்தது.

பிறர் பேசும்போது ஒட்டிக்கேட்கும் பழக்கம் இதுவரை எனக்கு இல்லை தான். ஆனுல் அன்றுமட்டும் ஏனே அவர்கள் பேசியதைக் கேட்க வேண்டும் என உள்ளம் விரும்பியது. காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு கேட்டேன். அவர்கள் அடிக்கடி குரலைத் தாழ்த்தித் தாழ்த்திப் பேசிய படியால் ஒன்றும் தெளிவாக விளங்க வில்லை. சரி போகலாம் என எழுந்த போது ''சினிமா—உண்மையாக முடியுமா'' என்று சில சொற்கள் காதில் விழுந்தன. மேலும் கேட்கலாம் என அமர்ந்தேன். ஆனுல் அதற்குள் அவர்கள் பேச்சு முடிந்துவிட்டது.

''நாளை வருகிருயா?'' என்ருள் ஓரகத்தி. ''கட்டாயம்'' என்ற விடை அவனிடமிருந்து கேட்டது.

இரவுஉணவின்போது எல்லோரும் சேர்ந்து உணவுஅருந்தினர்கள். ஆனுலும் அங்கேபேச்சரவமே கேட்கவில்லை. விருந்தினரை ஒப்புக்காகச் சில சொற்கள் ''வேண்டுமா''......''இன்னும் கொஞ்சம்'' என்றுகூட கணவரோ அவர் அண்ணனே கேட்கவில்லை. முன்பின் அறிமுகமில்லாதவர்கள் கூட உணவுக் கடைகளில் சாப்பிடும் போது 'என்ன அநியாயம் பாருங்க' 'இதுவா மோர்?' 'எல்லாம் மோசம்' 'வரவரக்கெட்டுவிட்டது' என்று ஏதாவது பேசிடக் கேட்டிருக்கின்றேன். இங்கோ மூவரும் ஒருவர்க்கொருவர் நன்ருகத் தெரிந்தவர்கள்; உறவினர்கள். உண்ணுகிறபோது பேச்சையே காணும். அப்பாவின் முகத்தில்சோர்வும் கவலையும் காணப்பட்டது. கடனுக்கு உட்கொண்டார் என்பது தெளிவாகத் தெரிந்தது. கணவரும் அவர் அண்ணனும்கூட கடனுக்குத்தான் உடன் உட்கார்ந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்பாவுக்கு அது எப்படித் தெரிந்திருக்கும்? அப்பா எங்கு என்ன வேலையாக வந்தார் என்று யாருமே கேட்கவில்லை.

மறுநாள் சோறு வடிப்பதற்காக வைக்கோல் கொண்டுவரலாம் என்று நான் அந்தப்பக்கம் போனபோது தோட்டத்துத் தாழ்வாரத்தில் அப்பாவும் அம்மாவும் கவலைதோய்ந்த முகத்தினராய் ஏதோ பேசிடக் கண்டேன். என்னைக் கண்டதும் அவர்கள் பேச்சு தடைப்பட்டது; திரும்பிப்போக எண்ணினேன்.

''வாம்மா ஒன்றுமில்லை வா'' என அம்மா என்னை அழைத்தார்கள்.

''என்னம்மா'' என்றேன்.

''நாங்கள் மாலை வண்டிக்குப் போகிறேம். உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். நாங்கள் ஏழாம் மாதமே வந்து அழைத்துப்போகிறேம்'' என்ருர்கள்.

எனக்கு ஒன்றும் பேசத் தோன்ற வில்லை. மெல்லத் தலையை மட்டும் அசைத்தேன்.

அன்று அப்பாவும்அம்மாவும்போன சற்றுநேரத்துக்கெல்லாம் பச்சையம்மாவின் தம்பி வந்தான்.

முன்பு அப்பா முதல் முறையாக வந்தபோது அவரை இரயில் நிலையம் வரை சென்றுவழிவிட்டு வந்த கணவர் இன்றுவீட்டிலேயே இருந்துவிட்டார்.

பச்சையம்மாவின் தம்பிக்கு கணவரைக் கண்டதும் முகம் சுருங்கியது. அவனைக் கண்டதும் கணவருடைய முகத்திலும் கடுப்பு இருந்தது. ஓரகத்தியோ ஏதும் சொல்லின்றிக் கிடந்தாள். அன்றைய பேச்சு நெடுநேரம் நிகழவில்லை.

அன்றிரவு நெடுநேரம் கழிந்த பின்னரும் எனக்கு உறக்கம் வரவில்லை.

இப்புறமும் அப்புறமும் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்து அலுத்து விட்டேன். எப்புறம் மாறினுலும் உறக்கம் வராமல் மனம் எங்கெங்கோ அலைந்து திரிந்து எதை எதைப்பற்றியோ எண்ணிக் கலங்கியது.

சிறுமியாய்ச் செல்வமாய் வளர்ந்த வாழ்வை எண்ணினேன். ஆடிதபாடிக் கவலையின்றிக் கழித்த காலத்தை எண்ணினேன். மணவறையில் இளமையின் தலைவாயிலில் மகிழ்ச்சிக்கடலில்குதித்துத்திளைத்ததுபோன்ற இன்பமான நிகழ்ச்சிகளை எண்ணினேன்.

என்மீது என்றென்றும் அன்பு மழை பொழிந்து அரவணைத்து வளர்த்த அன்னையை எண்ணினேன். அந்த அன்னை நான் வாழ்கின்ற வீட்டில் வந்து இருந்தபோது இங்கே மற்றவர்கள் அவளுக்கு அளித்த புறக்கணிப்பை எண்ணினேன். என்னைப் பெற்ற அந்தத் தாயின் முகத்திலும், வளர்த்துப் பாராட்டிய தந்தையின் முகத்திலும் தோட்டத்துத் தாழ்வாரத்தில் இருந்தபோது கவலை படர்ந்திருந்ததை எண்ணினேன். எண்ண எண்ண நெஞ்சம் வெடித்து விடுவது போன்ற வேதனை வெளிப் பட்டது. விம்மல் ஒலி கேட்டு மற்றவர்கள் விழித்துக்கொள்ளப் போகிருர்களே என்று அஞ்சி வாயில் துணி அடைத்து அடங்கினேன்.

மனதிலே நிம்மதி இருந்தால் தானே உறக்கம்வரும்? என் மனம் தான் அந்த வீட்டினுள் அடி எடுத்து வைத்த நாள் முதல் அமைதி இழந்து அல்லற்படுகின்றதே. துன்பம் நுகர்ந்து பழகிப் பழகி உள்ளம் மரத்துப்போனது என்ருலும் அம்மாவையும் அப்பாவையும் கண்டதும் மறைந்திருந்த துன்பம் கிளர்ந்து எழுந்து விட்டது. காற்றில்லாமல் நீறுபூத்து விட்ட கரித்துண்டை விசிறியால் விசிறியதும் நீறு பறந்து நெருப்பு தணலாகின்றது. என் மனமும் கூட துன்பம் என்ற நெருப்புக் பிடித்து எரியும் கரித்துண்டாக இருந்தது. நெடுநாள் ஆக ஆக அது நீறு படிந்ததுபோல் மாறுபாடின்றிக் கிடந்தது. கல்விழுந்ததும் தண்ணீரில் கலக்கம் ஏற்படுவதுபோல் அம்மாவும் அப்பாவும் வந்தது என் மனத்தில் கிடந்த நெருப்பை ஊதிவிட்டது போல் ஆகிவிட்டது. அதனுல் அன்றிரவு அமைதி இழந்து தவித்தேன். ஆறுதல் பெற முயன்றேன்; அடங்காத மனம் அலமந்து அல்லற்பட்டது. (தொடரும்)

## நல்ல செய்தி

'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர் இராம-அரங்கண்ணல் 24-10-56 அன்று மகனுக்குத் தந்தையானுர் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

# முகப்பில்.....

இதுதான் உலகத்தின் இறுதியோ என்று எங்கும் ஏக்கமும் திகைப்பும் சூழ்ந்திருந்தபோது சர்ச்சில் தன் திறமையாலும் போர் அனுபவத்தினாலும் இங்கிலாந்து நாட்டைப் போராபத்தினின்றும் காத்து வெற்றி விழா கொண்டாடிக் கொண்டிருந்த நேரம் 1945—! அதே ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சர்ச்சில் கட்சியைவிட அட்லியின் கட்சி அதிகமான இடங்களைப் பெற்று ஆட்சிப் பீடம் ஏறியது.

போரில் போற்றுமளவு சர்ச்சிலின் சேவையும் துணையும் நாட்டுக்குப் பயன்பட்டது என்றாலும், போர் நீங்கிய போது நாட்டு முன்னேற்றத்திற்கு அட்லியின் தலைமையைத்தான் மக்கள் விரும்பினர்.

சர்ச்சில் போர்க் காலத்தில் உலகின் பலமுனைகளுக்கும் பறந்து அலைந்து கொண்டிருந்தபோது அரசாங்கத்தினை நடத்தும் பெரும் பணியைச் செம்மையாகச் செய்தவர் அட்லி.

சர்ச்சிலும் அட்லியும் வேறு வேறு கட்சியின் தலைவர்கள் எனினும் நாட்டை நாசம் சூழுமோ என்று அஞ்சிய நேரத்தில் இணைந்து கூட்டாட்சி கண்டனர். சர்ச்சில் பிரதமரானார். அட்லி துணைப் பிரதமரானார்.

சாதாரண சராசரி குடும்பத்தில் பிறந்த அட்லி கற்றுப் பட்டம் பெற்றதும் வழக்கறிஞர் வேலையில்தான் ஈடுபட்டார். அனாதைப் பிள்ளைகள் விடுதி ஒன்றைக்கண்ட அட்லியின் மனம் அவர்களைப் பற்றியே எப்போதும் எண்ணத் தொடங்கியது. மக்கள், மக்கள் இன்பம், என்று எண்ணி எண்ணி அவர்களுக்காகப்பாடுபடும் உழைப்பாளர் கட்சியில் சேர்ந்தார். அதிலேயே தன் முழு நேரத்தையும் ஈடுபடுத்தி உழைக்க எண்ணி வழக்கறிஞர் பணியை விடுத்தார்.

பொதுப் பணியிலும் அரசியல் நிகழ்ச்சிகளிலும் அட்லியின் பங்கு வளரத் தலைப்பட்டது. கொஞ்ச நாட்கள் பொருளாதார விரிவுரையாளராகவும் இவர் பணி ஆற்றியிருந்திருக்கின்றார்.

1922-ஆம் ஆண்டுதான் அட்லி பாராளுமன்றத்தின் உறுப்பினராகி நேரடியாக அரசியலில் ஈடுபட்டார் என்றாலும் 1919-ஆம் ஆண்டிலேயே 'ஸ்டெப்னே' நகர மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்நகரின் நலனில் நாட்டம் செலுத்தி வந்தார்.

உலகப் பெரும் போருக்குப் பின் பிரதமரான அட்லியின் அரசியல் வாழ்வு பரந்த அனுபவம் உடையதாகும். 1924-ஆம் ஆண்டு முதலே அரசாங்கத்தில் ஏதேனும் ஒரு துறையில் உயர்வான பதவியை இவர் அவ்வப்போது பெற்று ஆட்சிமுறையில பழக்கமும் அனுபவமும் பெற்று விளங்கினார். அதனால்தான் வீழ்ந்துவிட்ட நாட்டின் எழுச்சிக்கான ஆக்க வேலைகளில் அட்லியால் ஈடுபட்டு வெற்றிகாண இயன்றது.

எங்கள் பேரரசில் சூரியன் மறைவதில்லை என்ற வீராப்புரையை விரும்பிடாது எங்கெங்கு விடுதலைக் குரல் எழுந்ததோ அங்கங்கெல்லாம் சமரசம் கண்டு அமைதியை நிலைநாட்ட முடிந்தது.

இந்தியா விடுதலை பெற்றதற்கு அட்லியின் நன்மனம் பெருங் காரணம் என்று கூறுவது மிகையன்று.

மற்ற இடங்களிலும் அட்லியின் ஆட்சிக் காலத்தில் பிரிட்டனின் நேசம் குலையாமல் குன்றாமல் காப்பாற்றப்பட்டது.

பழமையைப் பெருமையாக எண்ணும் இங்கிலாந்து நாட்டில் அட்லியின் ஆட்சி செய்த சமூக, பொருளாதார சீர்திருத்தங்கள் பலவாகும்.

இதுவரை இங்கிலாந்தின் பிரதமர்களாக இருந்தவர்களுள் மக்களிடை நன்பதிப்புப்பெற்று அவர்கள் மனங்கவர்ந்து இருந்த பிரதமர்களாக இருந்தவர்களுள் அட்லிக்குச் சிறப்பான இடம் உண்டு.

ஆட்சிப்பீடத்தில் மட்டுமேயன்றி எழுத்தாளர் உலகத்திலும் அட்லிக்கு ஒரு இடம் உண்டு. அட்லியின் தன் வரலாறு 'சுயசரிதம்' பொருளாதாரத்தைப்பற்றி அவர் இயற்றிய நூல்களும் மிகச் சிறப்புடையனவாகும.

அட்லி தன்னுடைய வரலாற்றில்தான், நிறைவுடைய வாழ்வு வாழ்ந்ததாக மகிழ்ந்து குறிப்பிடுகின்றார். அந்த நிறைந்த வாழ்வு அவருக்கு அமைதற்கு அவர் துணைவி பெருந்துணையாக இருந்தார் என்று கூறல்வேண்டும்.

குடும்பத்தில் குதூகலம் ஏற்படக் காரணமாக இருந்தது மட்டுமன்றி அரசியல் வாழ்க்கையிலும் அவர் துணைவியாரின் பெரும்பங்கு பெற்றிருந்தார்.

தேர்தல் காலங்களில் தன் கணவருக்குக் கார் ஓட்டும் வேலையை அம்மையார்தான செய்வார்களாம். சில நாட்களில் நானூறு மைல்கள் கூட பயணம் நீளுமாம். வெளிநாடுகளுக்கு அட்லி சென்றால் அங்கும் உடன் சென்று துணை செய்யும் நற்றோழனாக, தொண்டனாக அவர்கள் இருந்து தன் கணவர்க்குப் பலவகையில் உதவுவதில் பெருந் துணையாக இருந்திருக்கிறார்கள்.

1883-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், 3-ஆம் நாள் இலண்டன் நகரின் ஒரு மூலையில் பிறந்த அட்லி பார் அறியும் பெருவாழ்வு வாழ்ந்து வயது சென்றபின் ஓய்வு தேடி அரசியலிலிருந்து விலகிக் கொண்டார்.

ஆனாலும் துணைவியரும் தானுமாக உலகெலாம் சுற்றி, அறிய வேண்டுவன அறியும் பணியில் இன்று ஈடுபட்டிருக்கின்றார்.

இப்போது இவ்வுபகண்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு வருகிறார்.

★

# மூட நம்பிக்கைகள்

'முன்னோர் என்ன முட்டாள்களா?'

'மேற்கு நாடுகளில்கூட முன்பெல்லாம் இது போல் இருந்ததாமே' — அறிவின் துணையுடன் புத்தூர் போவாரைப் பார்த்துப் பழமைப் புரியினர் விடுக்கும் வினாக்கள் இவை. நம்முடைய நாடே எவ்வளவோ மேல் என்று கூறலாகும். அறிவு வளருவ்தற்கு முன் மேற்கு நாடுகளில் மக்கள் மனம் அறியாமையில் மூழ்கிப் பாழ்பட்டுக்கிடந்தது என்பதற்கு ஏராளமான சான்றுகள் காணப்படுகின்றன.

*

குடித்துப் பெறலாம் குதூகலம் என்றுதான் ஏழெட்டுக் கனவான்கள் ஒரு மதுக் கடைக்குச் சென்றனர். மது உள்ளே சென்றதும் மயக்கம் அவர்களை ஆட்கொண்டது. எதனாலோ வாதத்திலே தொடங்கி வார்த்தை முற்றி கைகலக்கும் அளவிற்கு அவர்கள் சண்டை வளர்ந்தது. அடித்தனர்; கடித்தனர்; ஆத்திரம் மீறிய ஒருவன் கையில் இருந்த கத்தியால் மற்றொருவனைக் குத்திவிட்டான். இரத்தம் பெருகியது; உயிரும் போனது.

குடிவெறியில் இருந்த மற்றவர்களுடன் கொன்றவனும் ஓடிவிட்டான். யார் கொன்றது என்ற உண்மையைத் தெரிந்துகொள்ள அந்நாட்டு மன்னன் ஒரு புதுமுறையைக் கையாண்டான்.

குத்துண்டு இறந்த பிணத்தைத் தரையில் கிடத்தி அதை சுற்றி யார் யார்மீது ஐயம் இருந்ததோ அவர்களை நிற்கச் செய்தான் "ஒவ்வொருவராக பிணத்தின் மார்பின்மீது வலது கையை வைத்து 'நான் கொல்லவில்லை' என்று உறுதி கூறுங்கள்" என்று கட்டளை இட்டான். எல்லோரும் அப்படியே செய்தனர்.

இறுதியாக வந்த ஒருவன் பிணத்தின் கால்களை முத்தமிட்டு அதை வலம் வந்து மார்பின்மீது தன் கையைவைத்து 'நான் கொல்லவில்லை' என்றான். உடனே பிணத்தின் மூக்கின் வழியாகவும் குத்துண்ட இடத்தின் மூலமாகவும் ஊற்றுநீர்போல் பெருகியது இரத்தம். அவன்தான் குற்றவாளி என்று மன்னன் தீர்மானித்தான்.

*

ஒரே புளுகு.. என்பீர்கள் இதனை. ஆனால் டென்மார்க்கில் நிகழ்ந்தது. என்று நம்பித்தான் மேற்கு நாடுகளில் இறந்தவன் மார்பின்மீது கைவைத்துச் சத்தியம் செய்யும் பழக்கம் நெடு நாட்களுக்கு முன் இருந்தது.

இதுமட்டுமா, இன்னும் எத்தனையோ பல வ்கையான மூட நம்பிக்கைகள் அன்றைய ஐரோப்பியனின் மனதில் இருந்து வந்தன.

நெருப்பில் நடத்தல்—காய்ச்சிய இரும்பைக் கையில் ஏந்துதல் — கொதிக்கும் நீரில் கரம் தோய்த்தல் இதுபோல் பலப்பல வழக்கங்கள் இருந்தன என்று அறிகின்றோம்.

எது ஒன்றுக்கும் காரண காரியத் தொடர்பு காணாத நாட்களில் மக்கள் அங்கு எதை எதையோ நம்பினர். அந்த நெறியில் நடந்தனர். காய்ச்சிய இரும்பு கள்வன் கையைத்தான் சுடும்; களங்கமில்லாதவன் கரத்தில் தண்மையாக இருக்கும் என்று, அறிவு அதிகம் வளராத நேரத்தில் எண்ணினர்; அறிவு வளர்ந்ததும் அந்த நம்பிக்கையில் இருந்த பொய்ம்மையை உணர்ந்து அதனை நீக்கினர்.

குழந்தைக்கு அறிவு வராதபோது செய்த தீமை ஒன்றனை அறிவுவந்து மனிதனாக வளர்ந்த பிறகு செய்யக்கூடாது என்றுதான் எண்ணுவோம்.

அதுபோல் மனித இனமே குழந்தையாக இருந்தபோது அறியாமையால் எதைஎதையோ அது போற்றி வந்திருக்கின்றது. அதை, வளர்ந்திருக்கும் இன்றும் போற்றுவது என்றால் என்ன வென்பது?

மேற்கு நாட்டு மனிதர்கள் திருந்திவிட்டிருக்க, நம் நாட்டிலேதான் இன்னும்சிலர் மனித இனக் குழந்தையின் செயல்களை நினைத்துக் கொண்டு 'அவர்கள் என்ன அறிவிலிகளா?' என்கின்றனர். ★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு திராவிடநாடு அச்சகத்தில்